*முதுகலைமாணி :2011-2012*
**இஸ்லாமிய வரலாறு : isc-602**

# மங்கோலியப்படை எடுப்பு இஸ்லாமிய உலகில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி விரிவாக ஆராய்க!

மாணவர் பெயர்: எம்.ஜே.எம். ரிஸ்வான்
பதிவு இலக்கம்: HD/ MA/ 08-09-/559
விரிவுரையாளர் : எம். ஐ.எம். ஹனீ்.பா (M,PHIL)
(அரபு இஸ்லாமிய நாகரீகத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

# முகவுரை

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தானது. சாந்தியும், சமாதானமும் தூதர்களில் இறுதியானவரான முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் வழி நடந்த அனைவரும் மீதும் என்றும் நிலையாக உண்டாகட்டுமாக!

ஹிஜ்ரி ஏழாம் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் மங்கோலியாவில் இருந்து புறப்பட்டு இஸ்லாமிய உலகின் மீது போர்தொடுத்த மிருக்க குணம் கொண்டவர்களையே வரலாற்றில் தாத்தாரியர், அல்லது மங்கோலியர் என்று கூறப்படும்.

வரலாற்றைப் படிக்கின்ற போது மிருகத்தனமான பண்பாடுகளை உடைய நம்பமுடியாத வீரம், போர்த்திறமை என்பவற்றை தமது பிறப்பியல் பண்பாகக் கொண்டவர்கள்தாம் மங்கோலியர் என்றால் வியப்பாக இருக்கின்றது.

மங்கோலியர்களைக் கண்டு நடுநடுங்கி அவர்கள் பற்றிய அச்சத்தால் அவர்களைத் தம்மிடம் அடகு வைத்த முஸ்லிம் மன்னர் இருந்தார்கள். பக்தாத் நகரில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு மங்கோலியரின் வீரம் பற்றியும், முஸ்லிம் மன்னர்களின் இயலாமை பற்றியும் புரிந்து கொள்ளப்போதுமான சான்றாகும்.

***வல்லவனுக்கு வல்லவன் பிறப்பான் இந்த வையகத்தில் என்பது போல*** எகிப்தை ஆட்சி செய்த மாவீரர் கதஸ் மன்னர் இந்த மங்கோலியர்களைத் தோல்வியுறச் செய்து வரலாறு படைத்தார். தம்மை யாராலும் எதுவும் செய்ய முடியாது என்ற ஆணவத்தில் மக்களை அடிமைப்படுத்தி அக்கிரம் புரிந்து கொண்டிருந்த மங்கோலியர் மனங்களைத் தளரச் செய்த மாபெரும் வீரத்தலைவன்தான் قطز கதஸ் மன்னன் என்பதை மறுக்க முடியாது.

மங்கோலியர்களை ஐன்ஜாலுத் عين جالوت போரில், وا! إسلاماه வாஇஸ்லாமாஹ் -இஸ்லாத்தை அழிவில் இருந்து காக்க முன்வாருங்கள்- என்ற ஆக்ரோஷ அழைப்பாணை மூலம் தனது படைகளை ஒன்று திரட்டி மங்கோலியர்களை திணறடிக்கச் செய்து தனது வீரத்தை நிரூபித்தவர் என்பதைப் பார்க்கின்ற போது மு.ஃ.தா போரில் அப்துல்லாஹ் பின் ரவாஹா என்ற நபித்தோழர்களை ரோமர்களை தோல்வியுறச் செய்ய தனது படைகளுக்கு விடுத்த போருக்கான ஆக்ரோஷ அழைப்பை இது நினைவுபடுத்துகின்றது.

அது மட்டுமின்றி, மனவலிமைமிக்கத் தலைவர்களால் மபெரும் வல்லரசும் வீழ்ந்து மண்டியிடும், சமூகம் தலை நிமிர்ந்து மரியாதையுடன் வாழும் என்பதை உணரக்கிடைக்கின்றது.

மங்கோலியப்படை எடுப்பு முஸ்லிம் உலகில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிய ஆய்வில் பின்வரும் தலைப்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் காணப்படும் நிறைகளில் அல்லாஹ் அருள் செய்யவும் குறைகளை அவன் மன்னிக்கவும் பிரார்த்திக்கின்றேன்.

மங்கோலியப் பேரரசு (கி.பி.1206- 1405)
மங்கோலியர்கள் யார்?
மங்கோலிய முதல் மன்னர் ஜன்கீஸ்கான்
தைமூர் லிங் மற்றும் தைமூரிய்யூன்
தைமூரிய்யூன் இனத்தவர்
மங்கோலியப் படை எடுப்பின் போது இஸ்லாமிய உலகின் நிலை
மங்கோலியக் கோத்திரங்கள் பற்றிய சுருக்கம்
மங்கோலியக் கோத்திரங்கள்
உலகின் மீது மங்கோலியப்படை எடுப்புக்கள் ஏற்படுத்திய தாக்கங்கள்.
இஸ்லாமிய உலகின்மீதான படை எடுப்பும் அதன் தாக்கமும்.
தாத்தாரியரின் பக்தாத் மீதான தாக்குதல் பற்றிய விபரம்
தாத்தாரியர் பக்கதாதில் அரங்கேற்றிய கொடூரம் பற்றி இமாம் இப்னு கஸீரின் பதிவு
தாத்தாரியர் நிலை பற்றி இமாம் இப்னுல் அதீரின் பதிவு
முக்கிய மூன்று சக்திகள்
மங்கோலியாவின் தற்போதைய சமூக அரசியல் பொருளாதார நிலை
**மங்கோலியரின் மறுபக்கம்**
அல்லாமா அபுல்ஹஸன் அலி நத்வி (ரஹ்) அவர்கள் தரும் ஒரு ஆங்கிலயரின் கூற்று.
ஸமர்கந்து வரலாற்றுப் பகுதியில் விக்கிபீடியா தரும் மற்றொரு தகவல்
மங்கோலியரின் இஸ்லாமியப் பிரவேசம்
தாத்தாரியர் இஸ்லாமிய வருகைபற்றி ملتقى أهل الحديث இணையதளச் செய்தி
மங்கோலியர் மத்தியில் இஸ்லாம் பரவியமைக்கான காரணங்கள்
இஸ்லாமிய தேசத்தின் மீது மங்கோலிய படை எடுப்பால் ஏற்பட்ட விளைவு என்ன?
மங்கோலியப்படை எடுப்புக்களால் இஸ்லாமிய உலகு, குறிப்பாக இந்தியா சந்தித்த விளைவுகள் பற்றி விபரிக்கின்ற அறிஞர் ஜவரானாவின் கருத்து
கி.பி பதிமோம் நூற்றாண்டில் இந்தியா மற்றும் கஷ்மீர் மாநிலங்களின் வரைபட அமைப்பு
மங்கோலியரின் வீழ்ச்சியின் ஆரம்பம்
முடிவுரை
உஸாத்துணைகள்

**இவண்**

**எம்.ஜே.எம்.ரிஸ்வான்.**

# *மங்கோலியப் பேரரசு (கி.பி.1206- 1405)*

மங்கோலிய, அல்லது முகலாயப் பேரரசு என்பது வரலாற்றில் பிரித்தானியப் பேரரசிற்குற்குப் பின்னால் உலகில் இரண்டாவது சாம்ராஜ்யமாக கணிக்கப்படுகின்றது. மத்திய ஆசியாவை நடுநடுங்கவைத்திய மேலாண்மைமிக்கப் பேரசு என்று அது வர்ணிக்கப்படுகின்றது. தற்போது மங்கோலியா என்று அழைக்கப்படும் நாடு மங்கோலிய, மற்றும் துர்கி இனத்தின் ஐக்கிய ஒருமைப்பாட்டின் விளைவாக உண்டான இனமும் நாடுமாகும். இது கி.பி. 1206ல் மங்கோலியப் பேரரசனாக தன்னைப் பிரணகடணப்படுத்திக் கொண்ட தைமோஜீன் என்ற சென்கீஸ்கான் முதல் ஆரம்பாகின்றது.

மங்கோலியர் தமது ஆட்சியில் பாரியளவு நிலங்ககளை வெற்றி கொண்டனர். அவர்களின் எல்லை தன்யூப் கணவாய் முதல் ஜப்பானின் கடல் எல்லை வரையும், ரஷ்யாவின் எல்லைக்கு சமீபமாக இருக்கின்ற ஃபின்லேன்ட் மாகாணங்களில் ஒன்றான (Veliky Novagorod) விலிகி நொவகுரோட் முதல் கம்போடியா வரைக்கும் நீடித்தது. அது கிட்டத்தட்ட 100 மில்லியன் சனத்தொகை மக்களையும், **முப்பத்தி மூவாயிரம் கோடி சதுரமைல்களையும் கொண்டிருந்தது.** அதாவது: உலகில் 22% வீதமான நிலப்பகுதியை தனது ஆளுகையின் கீழ் வைத்திருந்தது. அதனால் சர்வதேச மங்கோலியப் பேரரசு என்றும் அழைக்கப்பட்டது.(1)

## *மங்கோலியர்கள் யார்?*

தாத்தாரிகள் என்போர் யாரோ அவர்களே மங்கோலியர்கள் என வரலாற்று ஆசிரியர்கள் சிலர் குறிப்பிடுவதை நவீன கால இஸ்லாமிய வரலாற்று ஆய்வாளரான ***அலி முஹம்மத் அஸ்ஸல்லாபி*** மறுத்துரைப்பதைப் பார்க்கின்றோம். தாத்தாரியர் என்போர் ஒரு தனியான இனம் என்றும், அவர்கள் ஜன்கீஸ்கான் மூலம் மங்கோலிய இனத்துடன் இணைக்கப்பட்டவர்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். இதன் மூலம் தாத்தாரியர் என்போர் மங்கோலியர்கள் என்றும், மங்கோலியர்கள் தாத்தாரியர்கள் அல்லர் என்றும் விளக்கம் தரப்படுகின்றது. (2)

இவர்கள் பல இனங்களில் கலப்பாகும். தாத்தாரியர்கள் என்ற இனமும் இவர்களுடன் இணைக்கப்பட்டனர். தாத்தாரியர், மங்கோலியர் என்பது இரண்டும் ஒரு பெயரைக் குறிக்க பலரால் மேற்கோள்காட்டப்படுவதை நாம் மறுப்பதற்கில்லை.

### *மங்கோலிய முதல் மன்னர் ஜன்கீஸ்கான்.*

கி.பி.1206 ல் துர்கி மற்றும் மங்கோலியக் குழுமங்களை ஒரு கொடியின் கீழ் ஒன்றுதிரட்டிய தைமோஜீன்-ஜன்கீஸ்கான் வடக்குப்பகுதியான சீனப்பேரசின் மீது போர் தொடுத்து அதைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் ஆற்றலை அசுர வேகத்தில் பெற்றார். மேலும், மேற்கு எல்லையில் காணப்படும் சக்தி வாய்ந்த குவாரிஸ்ம் பிரதேசத்தை தன்வசப்படுத்த முயன்றார். ஆரம்பத்தில் அது கைகூடவில்லை. பின்னர் அதையும், மத்தியாசியாவில் ரஷ்யாவிற்குப் பின்னால் காணப்படும் நகரங்கள், மற்றும் பாரசீகத்தையும் கைப்பற்றினார். பின்னர் ரஷ்யாவின் கேஃப் மாகாணம், மற்றும் கோகாஸ் மாகாணங்களை தன்வசப்படுத்தி மங்கோலியாவுடன் இணைத்துக் கொண்டார். தனது மரணத்திற்கு முன்னால் தனது அரச ராஜ்யத்தை தனது மக்களுக்கு பகிர்நதளித்தார். இதன் மூலம் அரச வழமைகள் போன்று தனது அரச குடும்பத்திற்கு ஆட்சி நிலைபெற்றிருப்பதை அவர் நாடினார். (3)

----------------------------------

1- http://forums.mazika2day.com/t76061.html

2- علي محمد الصلابي: المغول" بين الإنتشار والإنكسار( ص3)

3- http://forums.mazika2day.com/t76061.html

மங்கோலியர் என்ற வரலலாற்றைப் பற்றிப் பேசுகின்ற போது தாத்தாரியர்கள் மறக்கடிக்கப்பட முடியாதவர்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சன்கீஸ்கான் என்ற சொல் மங்கோலிய மொழியில் உலகத்தை அடக்கி ஆள்பவர், உலக அரசர்களின் அரசன், வலிமையான மன்னன் என்ற பொருள் கூறப்படுகின்றதாம். இவரது இயற்பெயர் தைமூஜீன் என்பதாகும். இரத்ததாகம் கொண்டவரான சென்கீஸ்கான் கடின போக்குடைய இராணுவத் தளபதியாகவும் விளங்கினான்.

யூத, கிரிஸ்தவ, மஜுஸிய மதங்களின் கலவையாக இவரது சிந்தனை காணப்பட்டதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். மங்கோலியரின் மார்க்கமும் இவ்வாறே காணப்பட்டது. (1)

## *தைமூர்லிங் மற்றும் தைமூரிய்யூன்*

***தைமூரிய்யூன் இனத்தவர்*** *செங்கீஸ்கானின் வழித்தோன்றலில் வந்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் பற்றிய சுருக்கம் அவசியமானதாகும்.*

***தைமூர்*** *என்பது தளபதி என்றும், லிங் என்பது நொண்டியன் என்றும் பொருள் தரப்படுகின்றது. தைமூர் ஒரு திருடன். உன்பக் இனத்தில் வந்தவன். ஒரு நாள் ஒரு ஆட்டைத் திருடிக் கொண்டு செல்லும் வழியல் ஆட்டு இடையனால் தாக்கப்பட்டான். அதனால் அவனது ஒரு கால்பாதிக்கப்பட்டது. அதனால் அவன், நொண்டித்தைமூர் என அழைக்கப்பட்டான். இவன் தனக்கென ஒரு கொள்ளைக் கூட்டத்தை வைத்திருந்தான்.* (கி.பி.1336- 1405) கி.பி பதின்நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த கொடிய மன்னர்களில் ஒருவன். குடிமக்கள் பலரைக் கொலை செய்து, பல பிரதேசங்களைக் கொள்ளையிட்ட கொடிய மன்னன் இவனை அடையாளப்படுத்த முடியும். *(2)*

## *தைமூரிய்யூன் இனத்தவர்*

*மத்தியாசியாவை மையப்படுத்தி (ஆப்கானிஸ்தானையும், அதன் அயல் நாடுகளையும்) ஆட்சி செய்த, துர்குமெனிஸ்தானின்* ***உஸ்பக்*** *இனத்தவர்களில் வந்தவர்கள். தைமூர்லிங்கின் தலைமையில் அட்டகாசம் புரிந்ததை அடிப்படையாகக் கொண்டு* ***தைமூரிய்யூன்*** *என அழைக்கப்பட்டனர். இவர்கள் கி.பி. (1405) வரை வடஇந்தியா, ஈரான்ஈராக், ஷாம், அடனோளியாவின் (துர்கியின்) கிழக்குப்பிராந்தியம், கஃப்காஸ் மாகாணத்தில் சில பகுதிகளை கி.பி 1363- 70- தொடக்கம் கி.பி. 1506 வரை ஆட்சி செய்தனர். கி.பி.1405 வரை ஸமர்கந்தை தலைமையகமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். பின்னர், அது ஹராத் நகரத்திற்கு மாற்றப்பட்டது. (3)*

*சென்கீஸ்கான் மங்கோலியத்தலைவர் என்றும், தைமூர்லிங் தாத்தாரியத் தலைவர் என்றும் அழைக்கப்படுகின்றனர். மங்கோலியர், தாத்தாரியர் என்ற இரு இனமும் சென்கீஸ்கானின் தலைமையில் ஒன்றிணைந்ததாகவே வாழ்ந்தனர். அவனது மரணத்தின் பின்னால் அவர்கள் தமது ஆட்சி மாகாணங்களைப் பிரித்துக் கொண்டனர். தைமூரிக்கள் ஸமர்கந்தை தமது தலைமைப்பீடமாக எடுத்து ஆட்சி செய்தனர் என்பதே வரலாறு கூறும் செய்தியாகும்.*

--------------------------

1– مجموع مؤلفات عقائد الرافضة والرد عليها – (39/3)

-2 تيموريون - ويكيبيديا، الموسوعة الحرة http://ar.wikipedia.org/wiki/تيموريون

-3 تيموريون - ويكيبيديا، الموسوعة الحرة

## *மங்கோலியப்படை எடுப்பின் போது இஸ்லாமிய உலகின் நிலை.*

மங்கோலியத் தலைவர்களில் சென்கீஸ்கான், தைமூர்லிங், ஹேலாகுகான் போன்ற கொடுங்கோல் மன்னர்களின் போர்த்திறமையும், ஆளுமையும்தான் உலகில் பெரும் பகுதியை அவர்களிடம் மண்டி இடச் செய்தது எனலாம். மங்கோலிய உலகப்பேரரசு என்று கூறப்படும் அளவு அவர்களின் ஆதிக்கம் உலகின் நாலா திசைகளுக்கும் பரவியது.

*மங்கோலியப்படை தோன்றிய வேளை முஸ்லிம் உலகு சிற்றரசுகளாகவும், சிறுசிறு தேசங்களாகவும் பிளவுபட்டுக்காணப்பட்டது. அது பொருளாதார அமைப்பிலும் சரி, அல்லதுஇராணுவ அமைப்பிலும் சரி ஒன்றைவிட மற்றொன்று பலவீனமாகவே இருந்தது. ஒன்று மற்றொன்றை எவ்வாறு வீழ்த்திடலாம், எல்லைகளை எவ்வாறு விஸ்தரிக்கலாம் என கங்கணம்கட்டிக் காலத்தைக் கழிப்பதில் அக்கறையாகச் செயல்பட்டது.*

*சர்ச்சைக்குரிய அரசர்களாக முஸ்லிம் அரசர்கள் விளங்கியதோடு குடிமக்கள் நலனை விட தமது நலனையே முன்னிலைப்படுத்தபவர்களாகவும் விளங்கினர். முஸ்லிம் மன்னர்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டும், பிளவுபட்டுக் கொண்டும் இருந்தனர். மது, சூது, மாது, பெரும்பாவங்கள், இசை என இஸ்லாம் தடுத்த அனைத்துவிதமான பாவச் செயல்களிலும் மூழ்கி இருந்தனர். (1)*

அப்பாஸியர் ஆட்சியின் மையப் புள்ளியான ப∴க்தாத் உட்பிரிவுகளாலும், அரசியல் குழுக்களாலும் ஆட்டம் கண்டிருந்தது. எகிப்து, ஷாம் பிரதேச அய்யூபி கலீ∴பாக்கள் மத்தியில் பிளவுபட்டுக்காணப்பட்டது. அதன் வடக்குப் பகுதி சல்ஜூக்கியர் வசம் பறிபோய் இருந்தது. இவற்றில் சக்திவாய்ந்த அரசாக குவாரிஸ்மிய அரசு காணப்பட்டது.

ஷீஆக்குழுவான இஸ்மாயீலிக்களின் தொடரான கழுத்தறுப்புக்களால் சமூகம் சின்னாபின்னப்பட்டுப் போனது. பெரும்பாவங்களான மது அருந்துததல், இசை, கேளிக்கை, கூத்து கும்மாளம், அடிமைச் சந்தைகள் என இஸ்லாம் தடை விதித்தவைகள் பரவிக் காணப்பட்டன.

இவ்வாறான காரணிகள் அனைத்தும் பல குழுக்களாகவும், கோத்திரங்களாகவும் சிதறிக்காணப்பட்ட மங்கோலியர்களை ஒன்றிணைத்து இஸ்லாமிய உலகின் மீது பாரிய தாக்குதலைக் தொடுப்பதற்கு சென்கீஸ்கானுக்கு வசதியாகியது. (2) உட்பூசல்களால் நிறைந்து காணப்படும் மிகப் பெரியதொரு வல்லரசைக் கூட வீழ்த்தும் திறமையும், ஆற்றலும் சாதாரண குழுக்களால் முடியும் என்பதை மங்கோலியர் வரலாறு நமக்கு உணர்த்துகின்றது.

மொரோக்கோ, மற்றும் இஸ்பைனில் இஸ்லாமிய அரசு பலவீனப்பட்ட நிலையில் காணப்பட்டது. அங்கு உள்நாட்டுக்கலவரங்கள் தலைதூக்கி நாடு அல்லோலகல்லோலப் பட்டுக்கிடந்தது. குவாரிஸ்மிய அரசு இஸ்மாயீலிய ஷீஆக்களின் ஆதிக்கம் நிறைந்தாக காணப்பட்டது. பெயரளவில்தான் இஸ்லாமிய கிலா∴பத் காணப்பட்டது என்பதுதான் சுருக்கமாகும்.

---

-1 د: علي محمد الصلابي: المغول" بين الإنتشار والإنكسار ص – 8 بتصرف يسير

-2 : علي محمد الصلابي: المغول" بين الإنتشار والإنكسار ص –(46/1) من المكتبة المكتبة الشاملة

# மங்கோலியக் கோத்திரங்கள் பற்றிய சுருக்கம்

ஹிஜ்ரி ஏழாம் நூற்றாண்டில் (கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில்) வாழ்ந்த இவர்கள் மங்கோலியாவில் மேற்குப்பகுதியான ஜோபி கடலுக்கும், (Khingan) மலைப்பகுதிக்கும் இடைப்பட்ட பாலைவனப்பகுதியில் வாழ்ந்த கரடுமுரடான சமூகம் என்று விளக்கம் தரப்படுகின்றது. வேட்டையாடுவது, மீன்படி போன்ற தொழில்களில் ஈடுபாடு காட்டினர். மாமிசத்தையும், குதிரைப்பாலையும் உணவாகக் கொண்டிருந்தனர். சென்கீஸ்கான் மன்னன் தோன்றும் வரை வரலாற்றில் அறியப்படாதவர்களாகவே இருந்தனர்.

## மங்கோலியக் கோத்திரங்கள்

1- **அல்கியாத் கோத்திரம்.** இதில் இருந்துதான் செங்கீஸ்கான் மன்னன் தோன்றினான்.

2- **ஓப்ரத்** கோத்திரம்.

3- நாய்மான் கோத்திரம்.

4- கிராய்த் (kerait) கோத்திரம். மங்கோலியக் கோத்திரத்தில் மிகவும் பலசாலிகள் என அறியப்பட்டார்கள். இவர்கள் கி.பி. 1008ல் கிரிஸ்தவ மதத்தை தழுவினர்.

5- **மர்கீத்** (markit) **கோத்திரம்.** இவர்கள் படைபலத்துடன் காணப்பட்டார்கள். செங்கீஸ்கான் இவர்களுக்கு எதிராக போர் தொடுத்து அவர்களை பூண்டோடு அழித்தார்.

6- **தாத்தாரியக் கோத்திரம். இவர்கள் வட சீனாவில் வாழ்ந்தவர்கள். வட ஆசியாவில் அட்டுழியம் புரிவதில் கடுமையானவர்கள் என அறியப்பட்டவர்கள். சுகமான வாழ்க்கை வாழ்ந்ததோடு, ஜன்கீஸ்கானின் வருகை வரை** மங்கோலியர்களுடன் தொடர்ச்சியான போரில் ஈடுபட்டு வந்தார்கள். இவர்களும் ஒருவர் கூட மீதமில்லமல் ஜன்கீஸ்கானால் ஒழித்துக்கட்டப்பட்டார்கள்.

***இவ்வளவு பலம் வாய்ந்த சமூகம் ஒழிக்கப்பட்டாலும் இவர்களின் பெயரலாலேயே தாத்தாரியர்கள் என வரலாற்றில் அழைக்கப்படலாயினர் என் சுப்ஹி அப்தில் முன்யிம் அபூஸைத் என்ற வரலாற்று ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்.*** (1) மேலதிக தகவல்களுக்கு (2)

பல கோத்திரங்களாகச் சிதறிக் கிடந்தவர்களை தனது முயற்சியினால் ஐக்கியப்படுத்தி **மங்கோலிய-தாத்தாரியர்-** என்ற இனத்தை உருவாக்கிய செங்கீஸ்கான் உலகில் -குறிப்பாக இஸ்லாமிய உலகில் கட்டவிழ்த்து விட்ட கொடூரங்கள் பல்லாயிரம். அதை முறியடிக்கும் திறணை முஸ்லிம் உலகம் பிற்பட்ட காலங்களில் பெற்றது என்பதே வரலாறு உணர்த்தும் உணமையாகும். இஸ்லாமிய உலகிற்கு எதிரான தாத்தாரியர் படை எடுப்பு பற்றி வரும் தொடர்களில் காணவிருக்கின்றோம்.

-------------------------------

1- صبحي عبد المنعم: الزحف المغولي على العالم الإسلامي

2- http://www.islamichistory.net/articles/sob1.htm

## உலகின் மீது மங்கோலியப்படை எடுப்புக்கள் ஏற்படுத்திய தாக்கங்கள்.

பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடின்றி ஈவிரக்கமற்ற போர்க்குற்றங்கள் பல வரலாற்றில் புரியப்பட்டுள்ளன. இவர்களின் வருகையின் பின்னர் வரலாறு சிகப்புமையால் எழுதப்பட்டது. அங்கு பீதி, அச்சமற்ற நிலைமை மக்கள் மனதில் ஆட்கொண்டிருந்தது. இவர்கள் எங்கிருந்து? ஏன்? எப்படி வந்தார்கள் ? முஸ்லிம்களுக்கு எதிராக எவ்வாறான கொடுமைகளை கட்டவிழ்த்து விட்டனர், அவர்களின் அராஜகங்களுக்கு எப்படி முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது போன்ற பின்னணி அறிவு அத்தியாவசியமானதாகும்.

தாத்தாரியர், அல்லது மங்கோலியர்கள் என்று அறியப்பட்ட இவர்கள் பல இனக்குழுமங்களைக் கொண்ட அமைப்பினராகும். இஸ்லாமிய உலகில் படை எடுப்புக்களை நடாத்தி அப்பிரதேசங்களைத் துவம்சம் செய்தவர்கள் தாத்தாரியர் என வழக்கில் கூறப்படுவது இவர்களைத்தான் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

உலகில் அக்கிரமத்திற்கும், அநியாயத்திற்கும், காட்டுமிராண்டித்தனத்திற்கும் உதாரணம் கூறப்படமுடியுமாக இருப்பின் இவர்களைக் கூறலாம் என்று கூறும் அளவு மனதில் இரக்கமற்றவர்கள் என்பதை அவர்களின் செயற்பாடுகள் உணர்த்துகின்றன

ஹிஜ்ரி 603 அதாவது கி.பி. 1206ல் பல சிதறிக் கிடந்த மங்கோலியர்களை ஒன்றிணைத்து அரசோச்சினார். பின்னர், சீனாவின் தென்பகுதி மாகாணங்கள் மீது போர் தொடுத்து அவற்றை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்.

பின்னர் தனது பிடியில் இருந்து தப்பிச் சென்றுள்ள படையினரைத் தேடிஅழித்தல் என்ற பெயரில் படிப்படியாக சீனாவின் பல பகுதிகளை தனது ஆளுகைக்குள் வைத்துக் கொண்டார். இவர் மங்கோலியர் தமது வாழ்வில் பின்பற்றிடும் பொதுவான ஒரு யாப்பையும் உருவாக்கினார். இவ்வாறு நாட்டில் உள்கட்டமைப்பில் இஸ்திரத்தன்மையை உருவாக்கிய பின்னர் வடசீனாவிற்குள் ஊடுருவினார். அதை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். பின்னர், பிறநாடுகள் மீது படை எடுக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தார். போரில் தனது எதிரிகளோடு கடுமையாக நடந்து கொண்டார்.

## இஸ்லாமிய உலகின்மீதான படை எடுப்பும் அதன் தாக்கமும்.

அலாவுத்தீன் முஹம்மத் குவாரிஸ்ம் ஷாஹ் (இவர் பெயரிலேயே குவாரிஸ்மிய அரசு அழைக்கப்படுகின்றது) என்பவரின் ஆட்சியில் உலகில் சக்திமிக்க அரசாகக் காணப்பட்ட **குவாரிஸ்ம் அரசு** என்று அறியப்பட்ட வலிமைமிக்க இஸ்லாமிய அரசுக்கு எதிராக தனது படைகளை நகர்த்தினார். இந்த அரசை சின்னாபின்னப்படுத்தி, அதன் மன்னரைக் கொலை செய்து, அதன் படைகள் மீது பாரிய இழப்பை

ஏற்படுத்திட சென்கீஸ்கானுக்கு வெறும் நான்கு ஆண்டுகளே தேவைப்பட்டது.
குவாரிஸ்மிய அரசுக்கு எதிராக கி.பி. 1219ல் போர் தொடுத்து கி.பி1223ல் மீண்டும் அவர் தனது படைகளுடன் நாடு திரும்பினார். (1) மேலதி விபரங்களுக்கு (2)

-------------------------------------

1- صبحي عبد المنعم: الزحف المغولي على العالم الإسلامي

2- http://www.islamichistory.net/articles/sob1.htm

இஸ்லாமிய உலகுக்கு எதிரான சென்கீஸ்கானின் தாக்குதல் குரூரமானதாக இருந்துள்ளது. போர் மட்டுமின்றி, ஒரு தேசத்தைப்பாழடித்தல், சிறுவர்களை, பெண்களை ஈவிரக்கமின்றிக் கொலை செய்தல், சித்திரவதை செய்தல் போன்ற தீய நடைமுறைகளைக் கடைப்பிடித்ததால் இஸ்லாமிய உலகில் இவர்மீதுள்ள பீதி அதிகரித்ததை மறுக்க முடியாது.
சென்கீஸ்கான் தனது 72 வது வயதில் கி.பி. 1227ல் மரணமானார். அதுவரைக்குள் மஞ்சள் கடலில் இருந்து கருங்கடல்வரை இவரும் இவரது குழந்தைகளும் வெற்றிவாகை சூடினர். சீனா, தான்கோட், ஆப்கானிஸ்தான், ஈரான், துர்கி ஆகிய பிரதேசங்களில் இருந்து பிரிந்த பல பிரதேசங்களையும், அவர்கள் தமது ஆதிக்கத்தில் இணைத்துக் கொண்டனர்.
சென்கீஸ்கானின் மரணத்தைத் தொடார்ந்து அவரது மக்கள் -அல்கோரீல்தாய்- என்ற தேசிய அமைப்பை உருவாக்கினர். அவரைத் தொடர்ந்து ஓக்தாய் என்ற அவரது புதல்வரை மன்னராகத் தேர்தல் அடிப்படையில் ஏகமனதாக தெரிவு செய்தனர். அவருக்கு அனைவரும் கட்டுப்பட்டு வாழ்ந்தனர். இவரது ஆட்சியில் சீனாவின் அரைவாசியை உள்ளடக்கிய கீன் மாகாணம் முழுவதும் இவரது ஆட்சியின் கீழ் வந்தது. இது சென்கீஸ்கானின் ஆட்சிகாலத்தில் இதன் ஒரு பகுதியே அவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.
மங்கோலியர் ஐரோப்பாவின் மீது படை எடுத்தனர். அதன் விளைவாக மோஸ்கோ, நோஜ்ரோத் போன்ற பிரதேசங்கள் இவர்கள் வசமாகின. ஹங்கேரியைத் தாக்கி, பிஷ்தாவை முற்றுகையிட்டதோடு கஸாகோ நகரைத்தீக்கரையாக்கினர்.
சென்கீஸ்கானின் மகன் ஓக்தாயின் மரணம் கி.பி. 1241ல் ஏற்பட்டதால் மங்கோலியக் கொடுமையில் இருந்து தப்பிப் பிழைத்தது ஐரோப்பா என்பார்கள். அதன் பின்னர் அவரது மனைவி தோராகீனாகான் அரச விவகாரங்களைக் கவனித்துக் கொண்டார். அவர் தனது மதிநுட்பத்தால் அரசர்களை, கவர்னர்களை, மாகாண ஆளுனர்களை கி.பி. 1246ல் நடைபெற்ற கோரியா்லதாய் மாநாட்டில் தனது மகன் கியோக்ஹான் என்பவருக்கு ஆட்சியை வழங்க சம்மதிக்கச் வைத்தார். இவர் நிலைமைகளை மீண்டும் சரி செய்து ஈரான், சீனா ஆகிய நாடுகளுக்கு தனது படைகளை அனுப்பினார். சில ஆண்டுகளே ஆட்சியில் அமர்ந்த கியோக்கான் திடீரென மரணித்தார்.
இவரது மரணத்தின் பின்னர் தோலோய் என்பவரின் குழந்தைகளுக்கு ஆட்சிகைமாறியது. மன்கோ பின் தோலோ என்பவர் கி.பி1250 ஆட்சி பீடம் ஏறினார். இவர் கி.பி. 1253ல் தனது சகோதரன் ஹேலாகோவையும், அவனது குடும்பத்தையும் பாரிய படைகளுடன் இஸ்மாயிலிய்யாக்களையும், அப்பாஸியர்களையும் எதிர்த்திப்போராட ஈரானை நோக்கி அனுப்பி வைத்தான்.
இதில் போர் வியூகங்களை வகுத்த மன்கோ தனது சகோதரனுக்குத் தேவையான சகல படைபலத்தையும்,

ஆயுதங்களையும் வழங்கினார். போர் பயிற்சிகள், ஆயுத தளபாடங்கள், எறிகணைகள், ஈட்டி அம்புகள் என அனைத்து விதமான போர் தளபாடங்கள் தயார் செய்து கொடுத்தான்.

இதற்காக 120000 (ஓருலட்சத்தி இருபதாயிரம்) சிறந்த மங்கொலியப் போர் வீரர்கள் இதற்காக தயார் செய்து அனுப்பட்டனர். ஹேலாகோ மங்கோலியத் தலைநகர் குராகோரமில் இருந்து கி.பி.1253ல் ஈரானை வந்தடைந்த ஹோலாகோ அந்நாட்டை கி.பி.1255ல் தனது ஆதிக்கத்தில் கொண்டுவந்தான். அல்மௌத் என்ற கோட்டை நொறுக்கப்பட்டதோடு இஸ்மாயீலிக்களிடம் இருந்து ஆயுதங்கள் முழுமையாக சேதப்படுத்தப்பட்டன. (1)

-----------------------------

1- صبحي عبد المنعم: الزحف المغولي على العالم الإسلامي http://www.islamichistory.net/articles/sob1.htm

**இரண்டு லட்சம் தாத்தாரியப்படைகள் பக்தாதில் நுழைந்தாக இமாம் இப்னு கஸீர் அவர்கள் அல்பிதாயாவந்நிஹாயா என்ற பிரசித்த பெற்ற வரலாற்று நூலில் குறிப்பிடுகின்றார்கள். நாட்பது நாட்கள் அவர்கள் தமது அட்டூழியங்களைக் கட்டுவிழ்த்துவிட்டார்கள் என்பதை இமாமவர்கள் பதிவு செய்துள்ளார்கள் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய அம்சமாகும்.**

இதன் மூலம் 171 ஆண்டுகள் ஆட்சி செய்த இஸ்மாயீலிக்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இஸ்மாயீலிக்களின் இடத்தைப் பிடித்துக் கொண்ட மங்கோலியர் அப்பாஸியர் ஆட்சிக்கு முடிவு கட்டும் நோக்கில் ஹமதான் பிரதேசத்தில் முகாமிட்டனர்.

இஸ்மாயீலிக்களின் ஆட்சியை ஒழித்துக்கட்டிய ஹோலாகோ தனது படைபலத்தை நிரூபித்துள்ளார் என்பது உணரப்படுகின்றது. இஸ்மாயீலிக்களின் ஆட்சி முடிவு ஆப்பாஸியர் ஆட்சிக்கான ஆட்டத்தை தீர்மானித்தது எனலாம்.

முஹர்ரம் மாதம் ஹிஜ்ரி 656ல்- கி.பி. 1258 ஜனவரி மாதம் பதின் ஆறாம் திகதி ஹோலாகோ பக்தாத் நகரை வந்தடைந்து. நாட்பது நாட்கள்வரை வாள்களை கையில் இருந்து எடுக்காமல் தானது கொடூரங்களை அரங்கேற்றினான். பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டனர். பள்ளிவாயில்கள் தீக்கரையாக்கப்பட்டது. அப்பாஸிய கலீ∴பா அல்முஸ்த∴ஸிம் பில்லாஹ் அவரது குடும்பத்துடன் கொலை செய்யப்பட்டார். சிறு தொகயினரே இத்தாக்குதலில் இருந்து உயிர் தப்பினர். (1)

அப்பாஸியர் ஆட்சிக்கு எதிரான துர்க்கியரின் தாக்குதல், அவர்களில் சல்ஜூக்கியர் முக்கியமானவர்கள் பக்தாதை கி.பி.1055- ஹி: 447 சல்ஜூக்கியர் தமதாக்கிக் கொண்டனர். பின்னர், சிரியா, ∴பலஸ்தீன் பூமிகளை ஆக்கிரிமித்தனர், கி.பி. 1258வது ஆண்டு மங்கோலியர் பக்தாதை துவம்சம் செய்ய வழிசமைத்துக் கொடுத்தனர். (2) (3)

ஒரு நாட்டில் காணப்படும் ஐக்கியமின்மை, குழுக்கள் வாதம், கட்சிப்பிளவுகள் வெளிநாட்டுப்படைகள் ஒரு வல்லரசு போன்ற ஒரு நாட்டையும் சின்னாபின்னப்படுத்திட உதவியாக இருக்கும் என்பதை அப்பாஸியர் கால உட்பூசல்கள், பிரிவுகள் நமக்கு உணர்த்துகன்றன.

-------------------------

1- صبحي عبد المنعم: الزحف المغولي على العالم الإسلامي

2- http://www.islamichistory.net/articles/sob1.htm

3- الجامعة الإسلاية : مجلة البحوث الإسلامية – (81 / 237)

## தாத்தாரியரின் பக்தாத் மீதான தாக்குதல் பற்றிய விபரம்

தாத்தாரியர் படை எண்ணிக்கை பற்றிக் குறிப்பிடும் இமாம் இப்னு கஸீர் அவர்கள் எட்டுலெட்சத்திற்கும் அதிகமான மக்கள் கொலை செய்யப்பட்டதாகவும் ஷீஆ ஆதராவளன் இப்னுல் அல்கமயின் துரோகச் செயல்தான் இதற்கான அடிப்படைக் காரணம் என்றும் சுட்டிக்காட்டி உள்ளார்கள். (1) அவர்களின் கொடூரம் பற்றி இமாம் இப்னுகஸீர் பின்வருமாறு விளக்குகின்றார்கள்.

**ثم دخلت سنة ست وخمسين وستمائة** فيها أخذت التتار بغداد وقتلوا أكثر أهلها حتى الخليفة، وانقضت دولة بني العباس منها ... وكان قدوم هلاكو خان بجنوده كلها، وكانوا نحو مائتي ألف مقاتل - إلى بغداد في ثاني عشر المحرم من هذه السنة، وهو شديد الحنق على الخليفة بسبب ما كان تقدم من الامر الذي قدره الله وقضاه وأنفذه وأمضاه ...... ووصل بغداد بجنوده الكثيرة الكافرة الفاجرة الظالمة الغاشمة، ممن لا يؤمن بالله ولا باليوم الآخر، **فأحاطوا ببغداد من ناحيتها الغربية والشرقية، وجيوش بغداد فى غاية القلة ونهاية الذلة، لا يبلغون عشرة آلاف فارس، وهم وبقية الجيش، كلهم قد صرفوا عن إقطاعاتهم حتى استعطى كثير منهم فى الاسواق وأبواب المساجد، وأنشد فيهم الشعراء قصائد يرثون لهم ويحزنون على الاسلام وأهله، وذلك كله عن آراء الوزير ابن العلقمى الرافضى، وذلك أنه لما كان فى السنة الماضية كان بين أهل السنة والرافضة حرب عظيمة نهبت فيها الكرخ ومحلة الرافضة حتى نهبت دور قرابات الوزير، فاشتد حنقه على ذلك،** فكان هذا مما أهاجه على أن دبر على الاسلام وأهله ما وقع من الامر الفظيع الذي لم يؤرخ أبشع منه منذ بنيت بغداد، وإلى هذه الأوقات، .................. وقد أشار أولئك الملا من الرافضة وغيرهم من المنافقين على هولاكو أن لا يصالح الخليفة، وقال الوزير متى وقع الصلح على المناصفة لا يستمر هذا إلا عاما أو عامين ثم يعود الامر إلى ما كان عليه قبل ذلك، وحسنوا له قتل الخليفة، فلما عاد الخليفة إلى السلطان هولاكو أمر بقتله، ويقال إن الذي أشار بقتله الوزير ابن العلقمي، والمولى نصير الدين الطوسي... (1)

ஹிஜ்ரி 656 ம்ஆண்டு வந்தது. அவ்வாண்டில்தான் தாத்தாரியர் பக்கதாதில் புகுந்தார்கள். ஆட்சியில் இருந்த கலீ:.பா உட்பட பலரைக் கொலை செய்தார்கள். இவர்களால்தான் அப்பாஸிய ஆட்சிக்கு முடிவுகட்டப்பட்டது.

ஹோலாகுகான் இரண்டு லெட்சம் படைகளுடன் இவ்வாண்டில் முஹர்ரம் பத்தில் நுழைந்தான். இவன் கலீ:.பாவைக் கடுமையாக வதைத்தான். கலீ:.பாவுடன் சமரஸமாக நடந்து கொள்ளவதாக கலீ:.பா நினைப்பதற்காக உயர்ந்த நன்கொடைகளை அனுப்பிவைத்தான். இவ்வாறு செய்யும்படி ஷீஆமதத்தவனான இப்னுல் அல்கமிதான் கருத்துக் கூறி இருந்தான். எனத் தொடரும் இமாம் இப்னுகஸீர் (ரஹ்) அவர்கள்... **அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பாத அக்கிரமக்காற தீய இறைமறுப்புப் படைகளுடன் தனது படைகளுடன் நுழைந்த அவன் பக்தாதை கிழக்கு மேற்கு முற்றுகை இட்டனர். பக்தாதின் படை மிகக் குறைவான எண்ணிக்கையினராகவே இருந்தனர். அவர்கள் பத்தாயிரத்தையும் தாண்டவில்லை. இவர்கள் அனைவரும் கலீ:.பாவின் ஆலோசகராக இருந்த இப்னுல் அல்கமி என்பவனின் ஆலோசனையின் பேரில் கொடுப்பனவுகள் அதிகம் வழங்கப்பட்டு சேவையில் இருந்து ஓய்வு கொடுக்கப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் சந்தைகளிலும் பள்ளிவாயில்களிலும் யாசகம் கேட்கும் நிலைக்கு மாறினார்கள். கவிஞர்கள் இவர்களை நினைத்து இஸ்லாத்தின் கதியை உணர்த்தி இரங்கல்பாடினார்கள். இவை அனத்துக்கும் இப்னுல் அல்கமி என்ற ஷீஆவாதி காரணமாக இருந்தான்.இதற்கு முன்னுள்ள ஆண்டு ஷீஆக்களுக்கும் சுன்னாக்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலவரத்தில் ஷீஆக்கள் கொள்ளையில் ஈடுபட்டனர்.**

**கலீ'.பாவை ஹோலாகோ அழைத்த போது கலீ'.பா அவனிடம் மண்டியிட்டு தலைகுனிந்து செல்லும்படி வற்புறுத்தப்பட்டார். கலீ'.பாவை கடுமையாக சித்திரவதை செய்யும் படி ஷீஆக்கள் வேண்டி இருந்தனர். இவை அனைத்தும் இப்னுல் துரோக அல்கமியின் ஆலோசனையில் பேரில் நடந்தேறின.(1)**

----------------------

**1- ابن كثير الدمشقي : البداية والنهاية - (13 / 234) (من المكتبة الشاملة)**

*முஸ்லிம் சமூகத்தின் துரோகிகளான ஷீஆக்கள் இஸ்லாமிய அரசுக்கு எதிராக எவ்வாறு சதி செய்து இஸ்லாமிய ஆட்சியை வீழ்த்தினார்கள் என்பதற்கு ஹி:656 வது வருடத்துரோகம் உலகம் அழியும் வரையும் போதுமானதாகும்.*

***தாத்தாரியர் அரங்கேற்றிய கொடுமைகள் பற்றி வர்ணிக்கின்ற இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள்:***

**ومالوا على البلد فقتلوا جميع من قدروا عليه من الرجال والنساء والولدان والمشايخ والكهول والشبان ودخل كثير من الناس في الآبار وأماكن الحشوش، وقنى الوسخ، وكمنوا كذلك أياما لا يظهرون، وكان الجماعة من الناس يجتمعون إلى الخانات ويغلقون عليهم الابواب فتفتحها التتار إما بالكسر وإما بالنار، ثم يدخلون عليهم فيهربون منهم إلى أعالي الامكنة فيقتلونهم بالاسطحة، حتى تجري الميازيب من الدماء في الازقة، فإنا لله وإنا إليه راجعون.**

ஊருக்குள் பிரவேசித்த தாத்தாரியர்கள் தங்கள் முன் அகப்பட்ட ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், இளைஞர்கள், வயோதிப் பெண்கள் என அனைவரையும் மூர்க்கதனமாகக் கொலை செய்தனர். அவர்களில் பலர்கள் கிணறுகள், கழிவறைகள், குப்பைத்தொட்டிகள் போன்ற இடங்களில் ஓடிஒழித்துக் கொண்டனர். அங்கு அவர்கள் பல நாட்கள் வெளியில்வராமல் தம்மை தற்காத்துக் கொள்வதற்காக மறைத்துக் கொண்டார்கள். அவர்களில் ஒரு குழு கட்டிடத்தினுள் புகுந்து அதற்கு தாள்பாள் இட்டுக் கொண்டதை அவதானித்த தாத்தாரியர் அதை உடைத்தும், தீய வைத்தும் சேதப்படுத்தி அவர்களைக் கொலை செய்தனர். இவர்களுக்கு அஞ்சி மலை உச்சியில் ஒழிந்து கொண்டவர்களைத் தேடி அழிக்கும் பொருட்டு அவர்களைக் கைது செய்து உச்சியில் இருந்து கீழே தள்ளிவிட்டனர்.

ஒரு கட்டத்தில் நீர்வடிய வேண்டிய பீலிகளால் இரத்தங்கள் வழிந்தோடியது என்பதை மனவேதனையுடன் தரும் இமாமவர்கள் فإنا لله وإنا إليه راجعون *என்ற இஸ்திர்ஜாவின் வார்த்தையால் முடித்து மேலும் விபரிக்கின்ற போது:*

அவ்வாறுதான் மஸ்ஜிதுகள், ஜும்ஆப்பள்ளிகள், தொடர்பாடல் நிலையங்கள் என அனைத்து இடங்களிலும் கொலைகள் தாராளமாக நடந்தேறின. முஸ்லிம் அல்லாத யூத, கிரிஸ்தவ சிறுபான்மை இனத்தவர், மற்றும் அந்தப்பாவி இப்னுல் அல்கமியின் செயலகத்தில் ஒதுங்கிக் கொண்டவர்கள், தமது பொருளாதாரங்களை இவர்களுக்கு வழங்கிய போது தமக்கும் தமது பொருளாதாரத்திற்கும் பாதுகாப்பு உத்தரவாதம் உறுதிப்படுத்தப்பட்ட வர்த்தகர்கள சிலரைத் தவிர ஏனையோர் அனைவரும் மிலேச்சத்தனமாகக் கொலை செய்யப்பட்டனர்.

இவ்வளவு காலமும் செழிப்புற்று விளங்கிய பக்தாத் நகரம் குறிப்பிட்ட மனிதர்கள் வாழும் பாழ்போன நகரமாக மாறியது. பசி, பட்டினியுடன் மக்கள் மனங்களில் பயம், பீதி அதிகரித்தது. பிரதமராக இருந்த இப்னுல் அல்கமி முஸ்தன்ஸிர் பில்லாஹ்வின் காலத்தில் ஒரு லெட்சத்திற்கும் அதிகமாக இருந்த படையினரை தனது தந்திரத்தால் பன்மடங்காகக் குறைத்தது மட்டுமின்றி, படைகளின் பெயர்களை பதிவு இடாப்புகளில் இருந்தும் நீக்கி இருந்தான்.பத்தாயிரம் வரை படைகள் குறைக்கப்பட்டதும் ஹமதானில்

முகாமிட்டிருந்த தாத்தாரியர்களுடன் கள்ள உறவை ஏற்படுத்தி செங்கம்பள வரவேற்பழித்து, இரகசியங்களை கசியவிட்டு, காட்டிக் கொடுத்த இந்தக் கோழையின் செயலால் பல லட்சம் உயிர்கள் பதறப்பதறப்பறிக்கப்பட்டன. அல்லாஹ்வின் விரோதிகளுடன் கைகோர்த்த இவனது துரோகம் இன்றுவரை பேசப்படுகின்றது என்றால் வரலாற்றில் இதைவிடவுமா துரோகம் வேண்டும். முஸ்லிம் உலகில் போர் தொடுப்பதற்குத் துணையாக செயல்படுபவர்கள் ஷீஆக்கள் என்பது இன்று நேற்றல்ல இன்றும் அதுதான் கதையாக இருக்கின்றது.

--------------------

1- البداية والنهاية - (13 / 235) (من المكتبة الشاملة)

## தாத்தாரியர் நிலை பற்றி இமாம் இப்னுல் அதீரின் பதிவு

***பிரபல இஸ்லாமிய வராலற்றாசியரான இமாம் இப்னுல் அதீர் அவர்கள் தாத்தாரியர் அரங்கேற்றிய கொடுமை பற்றி விபரிக்கின்ற போது இவ்வாறு பதிவு செய்கின்றார்கள் :***

لقد بقيت عدة سنين معرضاً عن ذكر هذه الحادثة استعظاماً لها، كارهاً لذكرها، فأنا أقدم إليه رجلاً وأؤخر أخرى، فمن الذي يسهل عله أن يكتب نعي الإسلام والمسلمين، ومن الذي يهون عليه ذكر ذلك؟ فيا ليت أمي لم تلدني، ويا ليتني مت قبل حدوثها وكنت نسياً منسياً، إلا أني حثني جماعة من الأصدقاء على تسطيرها وأنا متوقف، ثم رأيت أن ترك ذلك لا يجدي نفعاً، فنقول: عمت الخلائق، وخصت المسلمين، فلو قال قائل: إن العالم مذ خلق الله سبحانه وتعالى آدم، وإلى الآن، لم يبتلوا بمثلها؛ لكان صادقاً، فإن التواريخ لم تتضمن ما يقاربها ولا ما يدانيها.

இந்த நிகழ்வின் கொடூரம் பற்றிய தாக்கத்தால் அது பற்றி நான் எதுவும் பேசாமல் பல காலங்கள் கவனயீனமாக இருந்தேன். ஒரு காலை முன்னால் வைப்பதும், மற்றதைப் பின்னால் வைப்பதுமாக இருந்தேன். இஸ்லாத்திற்கும், முஸ்லிம் உம்மத்திற்கும் ஏற்பட்ட இந்த நிகழ்விற்கு மரண அறிவித்தல் சொல்ல யார்தான் இருக்கின்றனர்!!! அது யாருக்குத்தான் எளிதானதாகத் தெரியும்! எனது தாய் என்னை இதற்கு முன்னர் பெற்றெடுத்திருக்ககூடாதா? என்கைசேதமே! நான் இந்த நிகழ்வுக்கு முன்னால் மரணித்து, மறக்கடிக்கப்பட்ட மனிதர்களில் ஒருவனாக இருக்கவேண்டாமா? நான் இது பற்றி எதுவும் பேசாது இருந்து கொண்டிருந்த வேளை எனது நண்பர்களில் சிலர் என்னிடம் இதைப் பதிவு செய்யும்படி ஆர்வமூட்டினர். பின்னர், இதை பதிவு செய்யாது விட்டுவிடுவது பயனற்றது எனக் கண்டேன். (பதிந்தேன்) நாம் சொல்வது என்னவெனில் அது படைப்பினங்களை முழுமையாகப்பிடித்துக் கொண்ட, முஸ்லிம்களை குறிப்பாக்கிக் கொண்டது. உலகில் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்ட நாள்முதல் இன்றுவரை இவ்வாறான ஒன்றைக் கொண்டு சோதிக்கப்படவில்லை என ஒருவர் கூறினால் அவர் உண்மையாளர். ஏனெனில் வரலாற்றில் இதற்கு நெருக்கமானதொரு நிகழ்வு இடம்பெறவில்லை.

ومن أعظم ما يذكرون من الحوادث ما فعله بخت نصر ببني إسرائيل من القتل، وتخريب البيت المقدس، وما البيت المقدس بالنسبة إلى ما خرب هؤلاء الملايين من البلاد، التي كل مدينة منها أضعاف البيت المقدس، وما بنو إسرائيل بالنسبة إلى من قتلوا، فإن أهل مدينة واحدة ممن قتلوا أكثر من بني إسرائيل، ولعل الخلق لا يرون مثل هذه الحادثة إلى أن ينقرض العالم، وتفنى الدنيا، إلا يأجوج ومأجوج. **وأما الدجال** فإنه يبقي على من اتبعه، ويهلك من خالفه، وهؤلاء لم يبقوا على أحد، بل قتلوا النساء والرجال والأطفال، شقوا بطون الحوامل، وقتلوا الأجنة، فإنا لله وإنا إليه راجعون، ولا حول ولا قوة إلا بالله العلي العظيم.

புக்த் நஸ்ர் என்பவன் பனூஇஸ்ரவேலர்களைக் கொடுமைப்படுத்தினான். பலர் கொலைகள் நடந்து. பைத்துல் முகத்தஸ் பாழடிக்கப்பட்டது. பைத்துல் முகத்திஸைப் பொறுத்தவரை அது ஒரு நகரம்தான் பாழ்போனது. இவர்கள் மில்லியன் கணக்கான பிரதேசங்களைப் பாழாக்கினர். பனூஇஸ்ரவேலர்களில் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை இவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப்பாரக்கின்ற போது

சாதாரணம்தான். உலகம் முடிந்து, அது அழியும் வரை மனிதர்கள் இவ்வாறானதொரு நிகழ்வைக் கண்டிருக்கமாட்டார்கள். வேண்டுமானால் **''ய.ஃஜுஜ்-ம.ஃஜு''** கூட்டத்தினர் குழப்பத்தைக் காணலாம். தஜ்ஜால் கூட தன்னைப் பின்பற்றியவர்களை அழிக்காது விட்டுவிடுவான். மற்றவர்களைத்தான் அழிப்பான். இவர்கள் ஒருவரைக் கூட விட்டுவைக்கவில்லை. மாற்றமாக, ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்களக் கொலை செய்தார்கள். கற்பினிகளின் வயிறுகளைக் கிழித்து, சிசுக்களை ஈவிரக்கமின்றிக் கொலை செய்தார்கள். இவ்வாறு முடிக்கின்றார்கள்.

**فإنا لله وإنا إليه راجعون، ولا حول ولا قوة إلا بالله العلي العظيم.**

---------------------

1- ابن الأثير: الكامل في التاريخ - (5 / 304) ذكر خروج التتر إلى بلاد الشام

## ***சிலுவைப் படையின் பங்களிப்பு:***

***ஐரோப்பாவில் இருந்து மங்கோலியாவிற்குரிய தரைமார்க்க வழித்தூரம் 12000- பனிரெண்டயரிரம் கிலோமீட்டர்களாகும்.*** **அதையும் தாண்டி அப்பாஸிய கிலா.ஃபத்தை வீழ்த்துவற்காக இஸ்லாமிய உலகின் முதுகெலும்பாக வர்ணிக்கப்படுகின்ற பக்தாதை வீழ்த்த ஐரோப்பியர் துணை நின்ற வரலாற்றைப் பாரக்கின்ற போது ஐரோப்பியரின் சரித்திரமே பிறருக்கு குளிபறிப்பதுதான் என்பது புலனாகும்.(1)**

## ***முக்கிய மூன்று சக்திகள்***

1- **இஸ்லாமிய உம்மாவின் சக்தி.**
2- **சிலுவைப் போராளிகளின் சக்தி**
3- **மங்கோலியப்படைகளின் சக்தி** (1)

இஸ்லாமிய சமூகத்தின் சக்திக்கு முன்னால் தனித்தனியே நின்றுபிடிக்க முடியாத சக்திகளாக இருந்த இவ்விரு சக்திகளும் ஒன்றிணைந்து இஸ்லாமிய உம்மத்தின் வீழ்ச்சிக்கு அடிகோலினர். ஒரு சமூகத்தின் வீழ்ச்சியை நிர்ணியிப்பதில் அதன் எதிரிகளை விட அதற்குள் இருந்தவாறே எழும் சதிதான் பாரிய ஆ.ஃபத்து நிறைந்தாகும். முஸ்லிம்கள் மத்தியில் காணப்பட்ட பிளவுகள், இயக்க வேறுபாடுகள் இதற்கு அடிகோலிய காரணிகளில் ஒன்றாக நோக்கப்படுகின்றது.

## ***மங்கோலியாவின் தற்போதைய சமூக அரசியல் பொருளாதார நிலை***

*15 லெட்சம் சதுர கி.மீ. எல்லையைக் கொண்ட மங்கோலியா மலைகள், பாலைவங்களை தன்னகத்தே உள்ளடக்கி இருக்கின்றது. அது மூன்று மில்லியன் மக்கள் சனத்தொகையைக் கொண்டது. அங்கு தனி நபர் வருமான பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. பாரிய பொருளாதார அபிவிருத்திகள் அங்கு கிடையாது. மேலும் அன்னிய உதவிகளும் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. அண்டை நாடுகளுடான சீனா, ஜப்பான், ரஷ்யா போன்ற அண்டை நாடுகளுடன் வருடத்திற்கு 70 மில்லியன் டொலர்களை முதலீடு செய்வதற்கு நடாத்திய பேச்சுவார்த்தையும் தோல்வி அடைந்துள்ளன. (2)*

------------------------------------

1. http://www.26sep.net/newsweekarticle.php?lng=arabic&sid=43825
2. http://ar.wikipedia.org/wiki



# மங்கோலியரின் மறுபக்கம்

மங்கோலியர் என்றாலே அவர்களின் கொடுமைகள்தான் மனங்களை ஆட்கொள்ளும். அவர்களின் மிருகத்தனமும், காட்டுமிராண்டித்தனமும் மனங்களில் இருந்து விலகாத நிகழ்வுகளாகும். இருந்தும், அவர்களுக்கு மற்றொரு பக்கமும் உண்டு என்பதை நம்மில் பலர் அறியாதவர்களாக இருக்கின்றனர். சிலைகள், நட்சித்திரங்களை வணங்கி வழிபட்ட இவர்கள், மரணித்த தமது மரணித்த மூதாதையர்ளின் உயிர்களைப் பரிசுத்தப்படுத்துபவர்களாக இருந்தனர்.
வனவிலங்குகளுக்கு தமது காணிக்கைகளை நிறைவேற்றும் இயல்புடையவர்களாக இருந்தனர். இவர்களை மஞ்சள் நிற இனத்தவர் என்று அழைக்கப்படும் இவர்கள் ஆசியாக்கண்டத்தை வியாபித்த ஒரு கலப்பு இனமாகும். தைமோஜீன் என்ற செங்கீஸ்கான் இவர்களை தனது தலைமயில் ஐக்கியப்படுத்தி மரணமானார். அவரது மரணத்தின் பின் அவரது மக்கள் ஆட்சியைக் கைப்பற்றி உலகில் பல கொடூரங்களை அரங்கேற்றினர்.

அவர்கள்தாம் இஸ்லாமயி கிலா.ஃ.பத்தின் மத்திய நிலையமாக விளங்கிய பக்தாதை துவம்சம் செய்தனர். இனச் சுத்திகரிப்பிலும், மனிதப்படுகொலையிலும் ஈடுபாடுகாட்டினர். அப்படி இருந்தும் அவர்களின் சந்திகளுக்கு அல்லாஹ் இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை வழங்கினான் அது பற்றி இங்கு சுருக்கமாக நோக்குவோம்.

முகாலய ஆட்சியாளர்கள் அவ்ரங்ஸீபைத்தவிர ஏனெயோர் பொதுவாக இஸ்லாம் பற்றி அறிவு அற்றவர்களாக இருந்தனர். இவர்களிடம் தவறான கருத்தோட்டம் காணப்பட்டது என்பதே உண்மை. இஸ்லாமிய அடிப்படை அறிவுகள் அற்ற வெறும் போராட்ட மன்னர்களாக இருந்துள்ளதை மறுக்க முடியாது என்பது ஸ.ஃ.பருல்ஹுவாலை என்ற அறிஞரின் ஆய்வின் முடிவாக விளங்கமுடிகின்றது. (1) இஸ்லாமியப் பிரதேசத்தில் நுழைந்து முப்பந்தைந்து வருடங்கள் கழிந்த போது இஸ்லாத்தில் நுழைய ஆரம்பித்தனர். அரை நூற்றாண்டுகள் கழிவதற்குள் அவர்களில் பெரும்பகுதியினர் இஸ்லாத்தை ஏற்றனர். இஸ்லாமிய மார்க்கம் அவர்களைக் கொண்டு கண்ணியம் பெற்றது. பல பிரதேசங்களை வெற்றி கொண்டனர். இவர்கள்

தமது இனத்தவர்களுடனேயே இஸ்லாமிய மார்க்கத்திற்காகப் போராடினார்கள். (2)

தைமூர்லின்ங்- பரம்பரையில் வந்தவர்களான இவர்கள் எனக் கேட்கும் அளவு இஸ்லாமிய மார்க்கத்தின் உயர்வுக்காக தம்மை அர்ப்பணித்த தலைமுறையினராக மங்கோலியர் மாறினர். இஸ்லாமிய உலகின் மீதான மங்கோலியப்படை எடுப்பால் பல தீமைகள் சுட்டிக்காட்டப்படுவது போன்று நன்மைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அவர்கள் எந்த தேசத்தை தாம் இறை நிராகரிப்பில் இருந்து கொண்டு அழித்தொழித்தார்களோ அப்பிரதேசங்களையே தமது கரங்களால் புணருத்தானம் செய்தனர். அவற்றின் இஸ்லாமிய அடையாளங்களை உயிர்ப்பித்தனர் என்பதையும் மறுக்க முடியாது.

-----------------------------

1- http://www.alhawali.com/index.cfm?method=home.SubContent&contentID=260

-2 **د/ راغب السرجاني: تاريخ المغول المسلمين من موقع : قصة الإسلام**

-3 د/ راغب السرجاني : قصة التتار من البداية إلى عين جالوت (صفحة: 15-1)

தாத்தாரிய மங்கோலிய இனமக்களிடம் அவர்களின் மூதாதையர்களிடம் காணப்பட்ட முரட்டுத்தனமான நடைமுறைகள், தீய பண்பாடுகள் புரையோடிப் போய் இருந்ததை மறுக்க முடியாது. குறிப்பாக அகீதா சார்ந்த பகுதியை எடுத்துக் கொண்டால் ஆரம்பகால முஸ்லிம்களிடம் காணப்பட்டது போன்ற நிரப்பமான அகீதா அறிவுஞானம் உடையவர்களாக இருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

இவர்கள் இஸ்லாமிய பிரதேசங்களின் பரம்பலின் அதிகரிப்பிற்கும், பலர் இஸ்லாமிய மார்க்கத்தில் பிரவேசிப்பதற்கும் முக்கிய காரணகர்த்தாக்களாக விளங்கினர். இஸ்லாமிய எதிரிகளால் இம்மக்கள் குறிவைத்து தாக்கப்பட்டனர், இன்னல்கள் பல நேர்ந்தன. இருந்தும் தாம் ஏற்றுக் கொண்ட இஸ்லாத்தைக் கைவிடாது வாழ்ந்து மடிந்தனர்.

***அல்லாமா அபுல்ஹஸன் அலி நத்வி (ரஹ்) அவர்கள் தரும் ஒரு ஆங்கிலயரின் கூற்று.***

தாத்தாரியரின் இஸ்லாமிய வருகை பற்றி இவ்வாறு விளக்குகின்றார்கள்.

**இஸ்லாமிய உலகு அடித்துச் செல்லக்கூடிய இந்த வெள்ளப் பிரளத்திற்கு முன்னதாகவும், அதன் தடையங்கள் அழிவதற்குள்ளாலும் இஸ்லாமிய பிரச்சாரம் சடுதியாக தாத்தாரியர் மத்தியில் பரவ ஆரம்பித்தது. வில்லுகள், அம்புகள், ஆட்சியாளர்களின் கெடுபிடிகளால் பரவ முடியாமல் இருந்த இஸ்லாம் அதன் எதிரிகளின் உள்ளத்தில் செல்லரிப்பாக மாறியது. அவர்களின் ஆள்மனதின் அடித்தளங்களை அது கவ்விக் கொண்டது. இஸ்லாமிய உலகில் தாத்தாரியரின் ஆதிக்கம் பரவியது போன்று அவர்களின் மனங்களின் இஸ்லாம் பரவியதுதான் ஆச்சரியமும், திடுக்கிடும் நிகழ்வுகளுமாக அமைந்தது. இதனால் இஸ்லாம் தனது தரப்பில் இழந்த நஷ்டயீடுகளை இவர்கள் மூலம் மீட்டிக் கொண்டது என்றே கூறவேண்டும்.**

தோமஸ் அர்னொல்ட் என்பவர் பிரசித்தி பெற்ற அவரது "الدعوة إلى الإسلام" **Preaching of Islam''** என்ற நூலில் குறிப்பிடுவதை எடுத்தெழுகின்ற அல்லாமா நத்வி அவர்கள் இவ்வாறு தெரிவிக்கின்றார்கள். இஸ்லாம் பாரியதொரு படுகுழிக்குள் தாத்தாரியர்களால் தள்ளப்பட்டும் இஸ்லாமிய அழைப்பாளர்களின் தனித்திறமையினால் தான் யாரிடம் தோல்வியுற்றதோ அவர்களிடம் தனது கொள்கையை நிலை நிறுத்தியது என்பது ஆச்சரியம். பொதுவாக யூத, பௌத்த, கிரிஸ்தவ மதங்கள் தமக்கிடையில் ஏற்படும் உக்கிரப்போரின் பின்னர் தனது எதிரிகளை தன்பக்கம் ஈர்த்துக் கொள்வது இயல்பாக இருப்பினும் கரடுமுரடான பண்புகளை, காட்டுமிராண்டிகளை இஸ்லாம் கவர்ந்து தன்பக்கம் ஈர்த்துள்ளதுதான் ஆச்சரியம் , அதற்கான முழுப் பெருமையும், சிறப்பும் இஸ்லாமிய அழைப்பாளர் பெருமக்களையே சாரும் எனக் குறிப்பிடுகின்றார். உலகில் காணப்படும் பல்வேறு மதத்தவர்களைவிட இஸ்லாமிய மக்கள்தாம் மங்கோலியரின் கொடூரங்களை சுவைத்தவர்கள். இது அவர்களின் பெருந்தென்மையினால் நடந்தேறியது என்றும் அர்னோல்ட் குறிப்பிடுகின்றார். (1)

----------------

1- د/ راغب السرجاني: تاريخ المغول المسلمين من موقع : قصة الإسلام

தாத்தாரியர்களின் இஸ்லாத்தின் வருகைக்கு முற்பட்டகாலம், பிற்பட்ட காலம் என இரண்டு காலப்பகுதிகள் உண்டு. இரத்த வெறிபிடித்த கொடுங்கோல் மன்னன் சென்கீஸ்கான், மற்றும் அவனது பர்பம்பரையில் வந்த ஹோலாகுகான் போன்றவர்களின் ஆட்சியில் முஸ்லிம் உலகம் பாரிய அரசியல், சமூக பொருளாதார சிக்கலில் மாட்டிக்கொண்டது.

ஒழுங்கான அரசியல் தலைமைகள் இல்லை. இஸ்லாத்தில் தோன்றிய உட்பிரிவுகளின் ஆதிக்கம் போன்ற அம்சங்கள் இஸ்லாமிய சமூகத்தின் அரசியல் நலிவுக்கான காரணிகளாக இருந்த போதே தாத்தாரியர் பக்தாத் மீது படை எடுத்து அதை நாசம் செய்தனர். அதனால் விபச்சாரம், திருட்டு, மதுப்பழக்கம் போன்ற தீய நடைமுறைகள் சமூகத்தில் பரவியது.

மக்களை நேர்வழிப்படுத்தும் அறிஞர்கள் பெருமக்கள் கொலை செய்யப்பட்டதன் விளைவாக நவீன ஜாஹிலிய்யா மற்றொரு முறை முஸ்லிம் சமூகத்தை ஆட்டிப்படைத்தது. இது சமூகத்தில் கல்வி அறிவற்ற ஒரு நிலையை மாத்திரமல்ல ஆன்மீகத்தின் வங்கரோத்து நிலையையும் தோற்றுவித்தது.
மங்கோலியர் இஸ்லாத்தில் இணைந்த பின்னால் இஸ்லாமிய சமூகம் மீண்டும் புத்துயிர் பெற்றது. இஸ்லாமிய கலை கலாசாரம், பண்பாடுகள் உயிர்ப்பிக்கப்பட்டலாயின. இது பக்தாதில் மாத்திரமல்ல மங்கோலியாவிலும்தான் காணப்பட்டது. அவர்களே உடைத்து நொறுக்கிய கட்டடங்களை அவர்கள் தமது

கரங்களாலேயே மீண்டும் கட்டினார்கள்.

இந்தியாவை கி.பி முதல் 1526- 1857- வரை ஆட்சி செய்த மங்கோலியர்களின் பரம்பரை மன்னர் பாபருடன் ஆரம்பாகின்றது. இவர்கள் தைமூரிய்யூன் என்ற மங்கோலிய இனத்தின் துர்குமெனிஸ்தான் நாட்டை பிறப்பிடமாகக் கொண்டவர்கள். அப்போதைய இந்தியாவை (பர்மா, ஆப்கானிஸ்தான், பர்மா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளை) இந்த மங்கோலியர்கள் ஆட்சி செய்தனர்.

கி.பி. (1556- 1605) வரை ஆட்சி செய்த மன்னர் அக்பரின் காலத்தில் இந்தியாவில் முகலாயர் சாம்ராஜ்யம் அதன் விம்பத்தை தொட்டது. அவர் முழு இந்துஸ்தாகத்தையும் தனது ஆதிக்கத்தில் கொண்டுவந்த ஒரு வீரமிக்க சக்கரவர்த்தியாகும். சிற்றரசுகளாகக் காணப்பட்ட இஸ்லாமிய அரசுகளுக்கு முடிவு கட்டி தனது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்தார். இந்துக்களையும், முஸ்லிம்களையும் சமமாக நடத்தியதாக வரலாறு குறிப்பிடுகின்றது.

அக்பரின் புதல்வாரன ஜஹான்கீர் (1605-1627), ஷாஹ்ஜஹான் (1628- 1658), சிறந்த பொருளாதார முன்னேற்றட்டத்துடன் இந்தியா காணப்பட்டது. இவர்களின் ஆட்சியில் அதன் வர்த்தகத் தொடர்பு ஐரோப்பாவரை சென்றடைந்தது. இவர்களின் காலத்தில் சமயரீதியான முன்னேற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு இல்லை என்றே கூற வேண்டும். அக்பரின் மிதவாத, அல்லது மதச்சார்பற்ற போக்கு இஸ்லாத்திற்கு அவப்பேரையும், வீழ்ச்சியையும்தான் தேடித்தந்தது.

பௌல் கிரிஸ்தவ மதத்தைப் பாழ்படித்தியது போல இஸ்லாத்தை பாழ்படுத்திய முகலாய மன்னர்களில் முதலாவது மன்னராக அக்பரைச் சுட்டிக்காட்ட முடியும். (1658-1707) வரை ஆட்சி செய்த அவ்ரங்ஸீப் உடைய காலப்பகுதி போர்த்திக்கையர், மற்றும் பிரத்தானியரின் அரசியல் பொருளாதார நெருக்கடிகளை சந்திக்கலானது. அவ்ரங்ஸீபின் இஸ்லாமிய கடும்போக்கு மக்களை அவரது ஆட்சியில் விரக்திகொள்ளச் செய்தது. அதனால் முகலாயப் பேரரசின் இருப்பு கேள்விக்குறியானது. அதன் வீழ்ச்சி கி.பி 1707வுடன் ஆரம்பமானது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

--------------------------------------------------------

1- **http://www.hukam.net/family.php?fam=**
2- **د/ راغب السرجاني ، موقع قصة الإسلام (الحكم المغولي التيموريون )**

## ஸமர்கந்து வரலாற்றுப் பகுதியில் விக்கிபீடியா தரும் மற்றொரு தகவல்

ஸமர்கந்து நகரம் முஸ்லிம் தளபதி ***குதைபா பின் முஸ்லிம் அல்பாஹிலி அவர்களால்*** (ஹி: 87- கி.பி. 705) ல் வெற்றி கொள்ளப்பட்டது. பின்னர் மீண்டும் ஒரு முறை அது (ஹி: 92- கி.பி.710) ல் வெற்றி கொள்ளப்பட்டது. இஸ்லாமிய வெற்றியின் பின்னர் பல கிரிஸ்தவ தேவாலயங்கள் முஸ்லிம்கள் தொழும் பள்ளிகளாக மாற்றப்பட்டன.

மங்கோலியர் இஸ்லாமிய உலகின் மீது படை எடுத்த போது இஸ்லாமிய அடையாளத்தைப் பிரதிபலிக்கின்ற அனைத்து கட்டங்களும் தகர்க்கப்பட்டன. அதுவே அவர்கள் அங்கு செய்த முதல் காரியமாகும்.

மங்கோலியர் இஸ்லாத்தை ஏற்றபின்னால தமது கரங்களால் சேதப்படுத்தி இஸ்லாமிய சின்னங்களை

மீண்டும் புணருத்தானம் செய்யலானார்கள். அதுவும் குறிப்பாக தைமூரிய ஆட்சியின் போதுதான் அதிக கவனம் செலுத்தப்பட்டது. தைமூரிய ஆட்சியானது (ஹி: 617- கி.பி.1220 முதல்- (ஹி:772- கி.பி. 1370) வரை (150) ஆண்டுகள் காணப்பட்டது. **தைமூர்லிங்** ஸமர்கந்து மாகாணத்தையே தனது தலை நகராகப் பிரகடணப்படுத்தி ஆட்சி செய்து வந்தார். (1)

*அதன் இஸ்தாபகரான சென்கீஸ்கானின் ஆட்சியில் மிகப்பெரும் வல்லரசாக விளங்கிய இந்த மங்கோலியா தைமூர்லீன் எனப்படும் தைமூர்லிங்கின் காலத்தில் செழிப்புற்று சிறப்பாக விளங்கியது. செங்கீஸ்கானின் மரணத்தை தொடர்ந்து ரஷ்யாவைத் தலைமையாகக் கொண்ட ஈரான், ஈராக் உள்ளடக்கி சாம்ராஜ்யம், சீனா, இந்தியா என நான்கு சாம்ராஜ்யங்களாகக் காணப்பட்டன.*

*அவை நான்கு -ஹானாத்- (தலைமை சாம்ராஜ்யங்கள்) என அழைக்கப்பட்டன. அதற்கென ஒரு தலைவர் இருந்தார். இவர்கள் கி.பி. 1857ல் அவர்களின் இறுதி அரசசை (மியன்மார்) தற்போதைய பர்மாவிற்கு நாடு கடத்தும் வரை இந்தியாவின் ஆட்சியில் இருந்தனர். (2)*

## *மங்கோலியரின் இஸ்லாமியப் பிரவேசம்*

மங்கோலிய மன்னர்கள் பலர் ஆட்சி செய்துள்ளனர். ஈராக்மீது படை எடுத்து பலலெட்சம் மக்களைக் கொலை செய்த ஹோலாகுகானின் மரணத்தின் பின்னால் ஈல்கானியர் ஆட்சி ஆரம்பமானது. அது ஹிஜ்ரி (663-756) வரை காணப்பட்டது. அபாகாஹான் என்பவர் ஹிஜ்ரி (663-680) வரை ஈரானைத் தலைமையகமாகக் கொண்டு ஆட்சிகிரீடம் ஏறினார். இவர் ஹோலாகுகானின் மகனாகும்.

ஹேலாகுகான்தான் பாப்பரசரினதும், ஐரோப்பிய அரசர்களினதும் ஆதரவின் பின்னிணயின் இஸ்லாத்தை அழிக்கப் புறப்பட்டவன். இவனது மரணத்தின் பின்னர் அவனது ஏழாவது மகன் தெகோதார் என்பவர் ஹிஜ்ரி (681-683) ஆட்சிக்கு வந்தார். இவரே மங்கோலியத்தலைவர்களில் முதலாவது இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர். இவர் தனது பெயரை அஹ்மத் என மாற்றிக் கொண்டார். இஸ்லாமிய மார்க்கத்திற்கும், முஹம்மத் நபியின் ஷரீவிற்கும் ஆதரவாக பகிரங்கமாகச் செயல்பட ஆரம்பித்தார். இது மங்கோலிய மக்கள் மனதில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. இவரைக் காரணமாக வைத்து மங்கோலியர் பலர் இஸ்லாத்தில் இணைந்தனர். (3)

------------------------------------

1. **http://ar.wikipedia.org/wiki/**تاريخ سمرقند ويكيبيديا، الموسوعة الحرة
2. **http://www.26sep.net/newsweekarticle.php?lng=arabic&sid=43825**
3. **http://alarabnews.com/alshaab/GIF/28-12-2001/12.HTM**تاريخ المغول

**தாத்தாரியர் இஸ்லாமிய வருகைபற்றி** ملتقى أهل الحديث ***இணையதளச் செய்தி***

அஜ்தாய்கான் இஸ்லாத்தில் இணைந்தார். முன்னர்பாரஸீக அரசன் கோஜோஸ் இஸ்லாத்தில் இணைந்திருந்தார். தஹூபிய்யா கோத்திரத் தலைவர் பரகத்கான் தனது மக்கள், படைகளுடன் முழுமையாக இஸ்லாத்தில் இணைந்தனர். அது ஹிஜ்ரி 654- 656 காலப்பகுதியாகும். பல்லாயிரம் படை வீரர்களுடன் நடந்த இந்த நிகழ்வானர்து இஸ்லாத்திற்கு கிடைத்த மிகப்பெரும் வெற்றியாகும்.

ஹிஜ்ரி ஏழாவது நூற்றாண்டில் சீனாவில் இஸ்லாம் பரவிய போது அங்குள்ள சில மன்னர்கள் இஸ்லாத்தில் இணைந்தனர். ***காஷ்கர்*** என்ற சீனாவிவின் மேற்குப் பிரதேசத்தை தமது ஆட்சித் தலைமை நகரமாக அவர்கள் எடுத்துக் கொண்டனர்.

வட, மற்றும் மேற்கு சீனாவில் இஸ்லாம் வேகமாக பரவ ஆரம்பபித்த போது அப்பாஸிய கலீ.ஃபாவான அல்மு.ஃதஸிம்பில்லாஹ்வுடன் பரகத்கான் தனது தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இது சீனர்களை ஆத்திரப்படுத்தியது. அதனால் சூழ்ச்சிகள் செய்ய ஆரம்பித்தனர். குறிப்பாக மங்கோலிய சீன மன்னர்களில் ஒருவரான யாகூப்கான் சீன வடமேற்கில் சுயாட்சியைப் பிரகடனப்படுத்தி காஷ்கர் நகரைத்தனது தலைநகரமாக எடுத்துள்ளதாக அறிவித்த போது.

உஸ்மானியப் பேரரசுடன் காலப்போக்கில் தமது தொடர்புகளை வலுப்படுத்தி போர்ப் பயிற்சிகளையும், ஆயத தளபாடங்களையும் அவர்கள் ஊடாகப் பெற்றனர். பாரஸீகத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த காஸாகான் மஹ்மூத் என்பவர் ஹி(674-793) ல் இஸ்லாத்தை ஏற்றதோடு பல மன்னர்கள் இஸ்லாத்தில் நுழைந்தனர். இஸ்லாத்தின் சக்தி மீண்டும் வலுப் பெற ஆரம்பித்தது. அவர் தனது பிரஜைகளை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார். அதனால் பலர் இஸ்லாத்தில் நுழைந்தனர்.

இவ்வாறு படிப்படியாக மங்கோலியக் கோத்திரத்தில் பலர் இஸ்லாத்தை ஏற்று அதற்கு வலுச் சேர்த்தனர். இஸ்லாமிய பிரதேசங்களில் மங்கோலியர் முஸ்லிம்கள் என்ற பெயரில் நிலைகொண்டனர்
ஹேலாகுகானின் சிறிய தந்தையின் மக்கள் ஐன்ஜாலூத் போருக்கு முன்னர் இஸ்லாத்தில் நுழைந்தனர். அப்போதிருந்தே இஸ்லாம் அவர்கள் மத்தியில் பரவ ஆரம்பித்தது.இஸ்லாத்தை சுயமாக ஏற்றுக் கொண்ட தெகோதார் அஹ்மத் ஒரு ஷீஆ சிந்தனையாளராக இருந்து மரணித்துள்ளார் என்பதே உண்மை.

694வது ஆண்டு **தாத்தாரிய மன்னரான காஸான் பின் அர்கோன் இஸ்லாத்தில் நுழைந்தாக** இமாம் தஹபி (ரஹ்) அவர்கள் தரும் குறிப்பு பின்வருமாறு பதிவு செய்யபட்டுள்ளதாக அந்த இணைய தளம் மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

*காஸான் பின் அர்கோன் என்ற தாத்தாரிய அரசர் இஸ்லாத்தில் இணைந்தார். நோரோஸ் என்ற அவரது பிரதித்தலைவரின் வேண்டுதலின் பேரில் இஸ்லாத்தின் தூய திருக்கலிமாவை அவர் மொழிந்தார். அதற்காக அந்நாளன்று அவரது தலையில் தங்கம், முத்துக்கள் தூவப்பட்டு அவர் கௌரவிக்கப்பட்டார். ரமளான் மாதம் வந்த போது அவர் நோன்பு நோற்றார். இந்த காஸான் அவர்கள் தனது நாட்டின் உத்தியோகபூர்வமார்க்கமாக இஸ்லாத்தைப் பிரகடனம் செய்தார். இதனால் மங்கோலியர்கள் மூலம் ஈரானில் இஸ்லாம் பரவியது. மங்கோலியர் தமது ஆடைகளிலும் மாற்றம் கொண்டு வந்தனர். தலைகளில் தலைப்பாகை அணிந்தனர் என இமாம் தஹபி அவர்களின் குறிப்பின் மூலம் விளங்கமுடிகின்றது. இவரது இஸ்லாம் குடாகோர் அஹ்மதின் இஸ்லாமிய பிரவேசத்தில் சற்று வேறுபட்டதாகும். அவன் தனிமனிதாக வந்தார். இவர் தனது படைகளுடன் வந்ததோடு நாட்டின் மதம் இஸ்லாம் என்றும் அறிமுகப்படுத்தினார். (1)*

\-------------------------

1- من موقع ملتقى أهل الحديث .

***மங்கோலியர் மத்தியில் இஸ்லாம் பரவியமைக்கான காரணத்தை பின்வருமாறு வகுக்கப்படுகின்றது.***

1- ஹிஜ்ரி முதலாவது நூற்றாண்டு முதல் ஆசியாவில் பரவ ஆரம்பித்தமை. இதற்கு முஸ்லிம் தளபதியான குதைபா பின் முஸ்லிம் அல்பாஹிலி (ரழி) முக்கிய பங்காற்றினார். அவர் சீனாவின் காஷ்ர் மாகாணத்தை வெற்றி கொண்டார். அது சீனாவின் அப்போதைய தலை நகராக விளங்கியது. இது ஹிஜ்ரி 94ல் நடை பெற்றுள்ளது. பின்னர் இஸ்லாம் தொடர்ந்து பரவியது. அதற்கு பண்பாடுகள், அழைப்புபணி முக்கியமான வழிகளாக இருந்தன.
2- இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்ற மங்கோலியர் பலர் அதன் யதார்த்தம் பற்றி அறியாதவர்களாகவும், தமது மூதாதையரின் மிருகத்தனமான போக்குகளில் இருந்தும் விடுபடாதவர்களாகவுமே இஸ்லாத்தில் இணைந்தனர். இது இஸ்லாத்திற்கு அவப்பேரைத் தேடிக்கொடுத்தது. (1)

**அரசர்கள் இஸ்லாத்தில் நுழைதல்:** மஹ்மூத்காஸான் என்ற மங்கோலிய அரசரே முதலாவது இஸ்லாத்தை (ஹி: 694- கி.பி 1295) ஏற்றவர். இஸ்லாத்தை நாட்டின் மார்க்கமாகப் பிரகடனப்படுத்தினார். இவர் இஸ்லத்தை ஏற்றதைத் தொடர்ந்து ஒரு லெட்சத்திற்கும் அதிகமான மங்கோலியர் குறுகிய காலத்தில் இஸ்லாத்தில் இணைந்தனர். பள்ளிவாயில்கள், மத்ரஸாக்கள், வைத்தியசாலைகள், விஞ்சான ஆய்வுகூடங்கள் என பல கட்டடங்கள் அமைத்து நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு சென்றார்.

**காஸான் தனது இளமைப்பருவத்தில் (ஹி 703-கி.பி.1303) தனது முப்பத்தி மூன்றாவது வயதில் காலமானார். அவரைத் தொடர்ந்து ஓல்ஜாய்டோ ஈல்ஹானிய அரசின் சிம்மாசனம் (ஹி: 703- கி.பி. 1304) ஏறினார். அவர் தனது சகோதரர் மஹ்மூத்வழி நடந்தார்.** *இவரது ஆட்சியில் மங்கோலியர் முழுமையாக இஸ்லாத்தில் நுழைந்தனர்.*

**ஈல்கான் மன்னன் ஷீஆ மதத்தை ஏற்ற முதல் மங்கோலிய மன்னன் என்ற வகையில் ஓலிஜ்ஜே டோ மம்லுக்கிய ஆட்சியாளர்களுடன் தனது தொடர்பை வலுப்படுத்தினார். முஹம்மத் பின் காலோன் என்ற மம்லூக்கிய அரசுடன் தனது நட்புறவை ஏற்படுத்தினார். இருந்தும் அரசுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டதால் அவை தமது நட்புவை முறித்துக் கொண்டன. (2)**

மங்கோலியரிடம் எவ்விதமான திருத்தமும் காணப்படவில்லை என்பதை முவலாயர் வரலாறு என்ற நூலாசிரியர் முனைவர் ந.க.மங்கள முருகேசன் பக்கம் 487-ல் குறிப்பிடுகின்றார். (3) இதனால் இவர்கள் பற்றிக் குறிப்பிடுகின்ற இமாம் இப்னு தைமிய்யா அவர்கள் :

يقول رحمه الله: إذا رأيتموني من ذلك الجانب – يعني الذي فيه المغول – وعلى رأسي مصحف فاقتلوني " ، لما كان يجزم به من كفرهم وظلمهم وعدوانهم

***'நீங்கள் என்னை தாத்தாரியனோடு எனது தலையணையில் குர்ஆனை வைத்துக் கொண்டு உறங்குவதைக் கண்டால் நீ ங்கள் என்னைக் கொல்லுங்கள் "* (3)** கூறுகின்றார்கள்.

---------------------------------

**1-** المغول من الهمجية إلى الإسلام **http://www.kalemasawaa.com/vb/t3064.html**

2- **موقع ملتقى أهل الحديث**

3- முனைவர்: ந.க. மங்கள முருகேசன். முகலாயர் வரலாறு பக்கம்: (487)

4- **موقع ملتقى أهل الحديث**

### ***மங்கோலியப் படை எடுப்பால் இஸ்லாமிய தேசத்தின் மீது ஏற்பட்ட விளைவு என்ன?***

உலகில் பொதுவாகவும், குறிப்பாக இஸ்லாமிய உலகிலும் பல கொடூரங்களை கட்டவிழ்த்துவிட்ட மங்கோலியர்கள் தமது காலடியின் கீழ் பல பிரதேசங்களை மண்டியிட வைத்தனர். தம்மிடம் காணப்பட்ட படை பலங்களைப் பயன்படுத்தி பிரதேசங்களை தமது ஆதிக்கத்தின் கீழ் அடிபணிய வைத்தனர். பொதுவாக படை எடுப்புக்களால் ஒரு தேசம் சிதைந்து சின்னாபின்னமாகி, ஒரு சமூகத்தின் இயல்நிலை பாதிக்கப்படுவது என்பதுதான் உண்மை.

போர்வீரர்கள் என்ற போர்வையில் ஒரு நாட்டின் மீது படைஎடுத்த சிலுவைப்போராளிகள், மற்றும் மங்கோலியர்கள் என்போரால் சமூக அரசியல் வாழ்வு மாத்திரம் இஸ்தம்பிதம் அடையவில்லை. மாற்றமாக சமயரீதியிலான பாதிப்புக்களும் நடந்துள்ளன.

ஒரு சிலுவைப் போராயின் ஒரு கையில் வாளும், மறுகையில் பைபிளும் இருந்ததைப் பாரக்கின்றோம். பக்தாதில் நுழைந்த தாத்தாரியக் கும்பலின் வரலாற்றைப் பார்த்தால் உயிர்கள், உடைமைகள், சொத்துக்கள், கலாச்சாரம் என பலமுனைகளில் சேதங்கள் விளைவிக்கப்பட்டிருப்பதை வரலாறுகளைப் படிக்கின்ற போது அறிய முடிகின்றது. அது பற்றி இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றது

/ அப்பாஸியர் ஆட்சியின் வீழ்ச்சி உலக இஸ்லாமிய ஆட்சியின் முடிவாக மாறியது.

/ **அப்பாஸியர் ஆட்சிக்கு பாதுகாப்பளித்து வந்த சக்திவாய்ந்த வல்லரசாகக் காணப்பட்ட குவாரிஸ்மிய அரசு மங்போலியப்படைகளால் வீழ்த்தப்பட்டமை.**

/ **இனச் சுத்திகரிப்பு. (தாத்தாரியர் படை எடுப்பால்** பல லெட்சம் பேரின் உயிர்கள் பறிக்கப்பட்டு, வீணாக இரத்தங்கள் சிந்தப்பட்டு, **பெண்களின் கற்பழிக்கப்பட்டமை.**

/ **கோடிக்கணக்கான பெறுமதிவாய்ந்த பொருட்கள் கொள்ளையிடப்பட்டு, உடமைகள் சேதமாக்கப்படுதல்.**

/ **ஒரு தேசத்தின் வளங்கள் சூறையாடப்படுதல்.**

/ **பலநூறு கல்விமான்கள் கொலை செய்யப்பட்டதோடு, கல்வி நிலையங்கள் அழித்தொழ்க்கப்பட்டு தீக்கரையாக்கப்பட்டமை.**

/ **பக்தாதில் காணப்பட்டன பெறுமதிமிக்க நூல் நிலையங்கள் கொள்ளையிடப்பட்டு ஐரோப்பாவிற்கு கடத்திச் செல்லப்பட்டதுடன், மீதமான நூல்கள் தஜ்லா நதியில் எரித்து வீசப்பட்டன.** (1) (2) (3)

/ இந்தியாவின் மீது படை எடுத்து இஸ்லாமிய மங்கோலியர்களின் வரிசையில் வந்த அக்பரிடம் தனது மூதாதையரின் குணங்கள் சற்றும் மாற்றம் பெற்றதாகத் தெரியவில்லை. ஹிந்துக்கள் வணங்கிய மாடுகளை அறுப்பதைத் தடை செய்து, மாற்றுமத ம ங்கயரை முஸ்லிம்களும், முஸ்லிம் மங்கயரை மாற்றுமதத்தவரும் மணம் முடிப்பதை ஆகுமாக்கி சமூக, சமய சீரழிவைத் தோற்றுவித்தார்.

ஷீக்கிய இனத்தவரின் தமது கற்பனையில் உதித்த மதத்தினை அங்கீகரிக்கட்ட புது சமயத்தவராகச் செயல்பட துணைபுரிந்தவரும் அக்பர் மன்னனே! (4)

------------------------------

1- www.aqlamonline.net

2- http://audio.islamweb.net/audio/index.php?page=FullContent&audioid=223317

3- http://blogs.najah.edu/staff/raed-mustafa/article/article-2

4- مسعود الندوي: تاريخ الدعوة الإسلامية في الهند ص: 59-65

**மங்கோலியப்படை எடுப்புக்களால் இஸ்லாமிய உலகில், குறிப்பாக இந்தியா சந்தித்த விளைவுகள் பற்றி விபரிக்கின்ற அறிஞர் ஜவரானா இவ்வாறு குறிப்பிடுகின்றார்.**

1- தைமூர்லிங்கின் இந்தியாமிதான மிருகத்தனமான படைஎடுப்பு நடவடிக்கயைால் டில்லியை பாழடைந்த நிலையில் விட்டுவத்ததுடன், அதன் வீதிகள் சடங்களால் நிரம்பிவழிய வழியச் செய்தார். அதேவளை அவர்கள் கைப்பற்றிக் கொண்ட வட இந்தியா போன்ற பகுதிகள் கலவரங்கள் நிறைந்து காணப்பட்டதோடு, பசியும், வறுமையும் அங்கு தாண்டவம் ஆடியது.

2- இந்தியாவில் **துக்லக்** பரம்பரையினரின் ஆட்சிக்கு முடிவுகட்டப்பட்டதோடு, அதன் பொருளாதாரத்தில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய அளவு எவ்வித முன்னேற்றமும் பதிவு செய்யப்படவில்லை.

3- உலகில் பல பிரதேசங்கள் செழிப்புற்று வளமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற போது இந்தியாவின் மீதான மங்கோலியப் படை எடுப்பு அதன் செழிமைக்கு முட்டுக்கட்டயைாக அமைந்து விட்டது.

4- தைமூர்லிங் இந்தியாவின் மீது படை எடுத்ததன் விளைவாக முஸ்லிம், இந்து ஐக்கியம் கேள்விக்குறியானது. அங்கு மதக்கலவரங்கள் உருவாகின. இதனால் **'முஸ்லிம்களைப் பற்றிய நம்பிக்கையின்மை இந்து மக்கள் மத்தியில் அதிகரித்தது. குறிப்பாக தைமூர்லிங் இந்துக்கோவில்களை உடைத்து, கூட்டுக் கொலைகளை அரங்கேற்றிய போது இந்நிலை அதிகரித்ததாக"** மஹாஜான் என்ற ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

5- மங்கோலியப்படை எடுப்பால் இந்திய சிப்பிகள், கட்டிடக்கலைஞர்கள், கலைவாதிகள் போன்ற பலர் சமர்கந்திற்கு கைதிகளாக கொண்டு செல்லப்பட்டதனால் அங்கு பள்ளிவாயில்கள், உயர்தர கோட்டைகள் போன்றவைகள் நிறுவப்பட்டன. இது இந்தியாவின் கட்டடக்கலையில் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணியது.

6- இவ்வாறான படை எடுப்புக்கள் பாபர் கி.பி1526-ல் இந்தியா மீது படை எடுக்க வழிஅமைத்துத் தந்தது. இந்நிலைக்கு, டில்லியைத் தலைமையமாகக் கொண்டு இஸ்லாமிய ஆட்சி செய்த துக்லக் குடுபம்பத்தினர் மத்தியில் காணப்பட்ட உள்ளநாட்டுக் கலவரம், அரசகுடும்பங்களின் உட்பூசல்கள் காரணமாகின. (1)

இந்தியாவின் முகலாயர் காலத்தில் கல்விக்கென்று தனி நிருவாகத்துறையோ, நிதியோ ஓதுக்கப்படவில்லை. முகலாயர் காலத்தில் மக்களுக்கு கல்வி அறிவு அளித்தல் அசரின் கடமை என்ற உணர்வு தோன்றவில்லை. பள்ளிகளில் மக்தப் முறைபேணப்பட்டு கல்வி புகட்டப்பட்டது. இந்த முறையை இந்துக்கள் தமது கோவில்களில் பேணிக் கொண்டனர். அக்பரின் காலத்தில் இந்த நிலை மாற்றம் பெற்றது. (2) இவ்வாறு முகலாயர் வரலாறு பற்றி எடுத்தெழுதும் மங்கள முருகேசன் என்பவர் இக்கருத்தை ஒத்தை கருத்தை தருவதைப் பார்க்கின்றோம்.

-----------------------------

1- الجورانه: الهند في ظل السيادة الإسلامية ( ص . 61-64 )

2- முகலாயர் வரலாறு: மங்கள முருகேசன். (பக்கம்: 490)

இருப்பினும் முகலாய மன்னர் ஷாஜஹான் காலத்தில் இந்நிலையில் மாற்றம் காணப்பட்டது. இவரது காலத்தில் பொருளாதாரம் பாரிய வளர்ச்சி கண்டது. அச்சம் பீதியற்று மக்கள் வாழ்ந்தார்கள். விவசாயிகள், உளவர்கள் போன்றோரின் முன்னேற்றகரமான முன்னோடி திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சிறப்பு வசதிகள் செய்து தரப்பட்டன.

இந்திய முகலயாப் பேரரசு உயர்வின் உச்சிக்கு ஆலம்கீர் அவ்ரங்ஸீபின் (1658-1707) காலத்தில் அடைந்திருந்தது. பின்னர் அது சுருங்கத் தொடாங்கியது.

அவ்ரங்ஸீப் அவர்கள் அக்பர் மன்னன் கொண்டு வந்த புதுமைகளை இல்லாதொழித்தார். அவரது கடும்போக்கு மங்கோலிய ஆட்சிக்கு முடிவைத் தேடித்தந்தாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

*‘மங்கோலியப்படை எடுப்பு உலக வரலாற்றில் மிகப்பெரும் சாபக்கேடாகவே இருந்துள்ளது. அவர்கள் கல்வி, சகாதாரம், போக்குவரத்து, கலாநிலையங்கள், மொழிகள் என எப்பகுதிக்கும் தொண்டு செய்யவில்லை. இது துர்கியப்படை எடுப்பினை ஒத்ததான காலணித்துவமாக இருந்தது. இதை நான் முதலாவதாக 1962ல் எமக்கு சென்ற போது அவதானித்தேன். அங்கு அவர்கள் எவ்வித கலாசாரம் தொடர்பான எதையும் விட்டுவிட்டுச் செல்லவில்லை என்பதை அந்தப் பயங்கரமான எமன் நாட்டின் புராதனக்கோட்டை எடுத்துக்காட்டியது. அத்துடன், 19-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தயார் செய்யப்பட்ட தொலை பேசி, மற்றும் அச்சு இயந்திரம் போன்றவைகளைத் தவிர. அவர்கள் போட்டுச் சென்ற மண்பாதைகள்தாம் இன்றும் காணப்படுகின்றன. என்கிறார் பின்வரும் இணைய தளத்தின் எழுத்டதாளர்களில் ஒருவர். (1)*

**இருப்பினும், இந்தியாவின் மீதான மங்கோலியப் படை எடுப்பு கலை கலாசார உயர்விற்கு வித்திட்டது என்று குறிப்பிடும் ஆய்வாளர்களும் , அதை உறுதி செய்கின்ற ஆவணங்களும் இல்லாமல் இல்லை. (2)**

-------------------------

-1- http://www.26sep.net/newsweekarticle.php?lng=arabic&sid=43825

-2- முகலாயர் வரலாறு: மங்கள முருகேசன். (பக்கம்: 381-430)

கி.பி பதிழோம் நூற்றாண்டில் இந்தியா மற்றும் கஷ்மீர் மாநிலங்களின் வரைபட அமைப்பு

A small French map of the Mogol Empire



## மங்கோலியர் வீழ்ச்சியின் ஆரம்பம்

கி.பி. (1260- 1264) இடைப்பட்ட காலப்பகுதி மங்கோலியப் பேரரசின் வீழ்ச்சியின் ஆரம்பமாகக் கூறப்படுகின்றது. சென்கீஸ்கானின் வழித்தோன்றல் மத்தியில் ஏற்பட்ட அதிகாரப்போட்டியே காரணம் என சுட்டிக்காட்டப்படுகின்றது. குறிப்பாக தஹுபிய்யா கோத்திரத்திற்கும், ஜாக்டாயின் அரசுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் முக்கியமானதாகும்.

**அதாவது கோப்லாய்கான்** என்ற மன்னனுக்கும் மங்போலிய மன்னன் **கஹுானகான்** கட்டுப்பட மறுத்ததுடன் தனிநாட்டு சுதந்தரக் கோரிக்கையை ஒத்த ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருந்திருந்தார் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த கோப்லாய்கானின் மரணத்தின் பின்னர் நான்கு அதிகாரமிக்க அரசுகளாக அவை மாறின.

அவை ஒவ்வொன்றும் தமது நலன்களின் மீது அக்கறைகாட்டின. இருப்பினும், மங்கோலியப் பேரரசு சக்திமிக்கமிக்கதாகவே விளங்கியது. இந்த அரசர்களை மக்கள் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு தமது ஆதரவை நல்கி வந்தனர்.

பதின் நான்காம் நூற்றாண்டின் முடிவுடன் அந்த அரசுகளில் பெரும்பாலானவை ஆட்டம்காண ஆரம்பித்தன. இருப்பினும், சீனாவின் பக்கீன் நகரத்தை தலைமையகமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்த யோவான் குடும்பத்தினர் கி.பி பதின்ஏழாவது நூற்றாண்டுவரை ஆட்சியில் இருந்தனர். அதன் பின்போ மங்கோலிய ஆட்சி வீழ்சிய அடைந்தது. (1)

மங்கோலியத் தாத்தாரியப் படையினர் தொடர்ந்தும் சக்திமிக்க வல்லரசாகக் காணப்படவில்லை. மாற்றமாக அவர்கள் முஸ்லிம் படைகளிடம் சிலுவைப் போராளிகளைப் போன்று படுதோல்வியடைந்தார்கள் என்பதுதான் வரலாறு.

மம்லூக்கிய மன்னமர்களில் ஒருவரான الأمير ركن الدين بيبرس البندقداري **அமீர் றுக்னுத்தீன் பைப்ரஸ் அல்புன்தகாரி என்பவர் ஹி: 658- கி.பி. 1260- ரமளான் மாதத்தில் தாத்தாரிய மங்கோலியர்களைத் தோல்வியுறச் செய்தார். இது முஸ்லிம்களின் வரலாற்றில் முக்கிய வெற்றியாகக் கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் காஸா முஸ்லிம் படைகள் வசமாகியது. தாத்தாரியரைத் தோல்வியுறச் செய்ய முடியாது என்ற கருத்து இங்கு உடைக்கப்பட்டது, பின்னர், முஸ்லிம் படைகள் வீரியத்துடன் எழுந்த நின்று**
**عين جالوت ஐன்ஜாலத் பகுதியை நோக்கி நகர்ந்தது.**

**மன்னர்** ஸை∴புத்தீன் கதஸ் அவர்கள் மங்கோலியரை எதிர்த்துப் போராட ஐன்ஜாலூத் செல்லும் வழியில் குலாகுகானின் படையில் அகப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட ஒரு முஸ்லிமின் மடல் கிடைத்தது. அதில் அவர் தற்கோது மங்கோலியர் தமது முன்னைய பலத்தில் இல்லை என்றும், அவர்களால் முஸ்லிம்

படைகளை எதிர் கொள்ள முடியாது என்றும் அவர் எழுதிய மடல் மன்னரை தெம்பூட்டியது. **ஐன்ஜாலூதில்** முஸ்லிம் படைகளிடம் பாரிய இழப்புக்களைச் சந்தித்த தாத்தாரியரின் தோல்வி உறுதி செய்யப்பட்டது. (2)

-----------------------------

1- http://ar.wikipedia.org/wiki/
2- علي محمد الصلابي "المغول ( التتار )بين الانتشار والإنكسار – (2 / 35

## *முடிவுரை*

*மங்கோலியர் பற்றிப் படிக்கின்றபோது அவர்கள் வேற்றுக்கிரத்தைச் சேர்ந்தவர்களா? அல்லது காட்டுமிராண்டிகளா என எண்ணத்தோண்டுவதுடன், அவர்களின் மிருகத்தனமான செயற்பாட்டால் அழிந்த உயிர்கள் பற்றிய மதிப்பீடு ஆச்சரியத்தை தருகின்றது. ஆனால் அது கற்பனையல்ல; நிஜம்தான் என்பதை உலக வரலாற்று ஆய்வுகள் உறுதி செய்கின்றன.*
*விலாசமற்றுக் கிடந்தவர்களுக்கு சென்கீஸ்கான் விலாசம் தந்தார். ஆனால் தீய வழிகளைக் கொண்டதாக அந்த விலாசம் அமைந்ததால் வரலாறு முழுவதும் மங்கோலியர்கள் சபிக்கப்படுகின்றார்கள்.*

*அன்று மங்கோலியன்- தாத்தாரியன்- என்றால் கருவில் இருக்கும் சிசுவும் கதிலங்கும் எனக் குறிப்பிடும் அளவு உலகை கிலிகொள்ளச் செய்தவர்கள் வரலாற்றில் விலாசமற்றவர்களாக இருந்தது போலவே மீண்டும் உலகில் அறியப்படாதவர்களாக மாறிப் போனார்கள்.*

*சக்தி,வலிமை, வீரம் ஒரு சமூகத்தின் இஸ்திரத் தன்மையின் அடித்தளங்களாகும். அதைவிடவும் முக்கியமானது அவர்கள் மத்தியில் காணப்படும் ஐக்கியமாகும். அதைவிடவும் முக்கியமானது உட்பூசல்கள் இன்றி பலமிக்கதோர் தலைமைத்துவத்தின் கீழ் அந்த சமூகம் கட்டி எழுப்பப்படுவதாகும். மங்கோலியர் முஸ்லிம் உலகின் மீது மாத்திரம் தாக்குதல் தொடுக்கவில்லை. மாற்றமாக அவர்களுக்கு எதிரான அனைத்து இன குழுக்குகளுக்கும் எதிராகவும்தான் தாக்குதல் நடத்தினார்கள். இருந்தும் அக்காலத்தில் வாழ்ந்த அனைத்துக் கோத்திரங்களும் அவர்களுடன் இணைந்து கொண்டதால் அவர்களுக்கு எதிரான தாக்குதல் தொடரவில்லை.*

*அதனால் தமது முழுக்கவனத்யையும் முஸ்லிம் உலகுக்கு எதிராகத் திருப்பி பல போர்களை முன்னெடுத்தார்கள். அது பாரிய அணர்த்தங்களையும், அழிவுகளையும் கொண்டிருந்ததோடு, பலலெட்சம் உயிர்களைக் காவுகொண்டது. வரலாற்றில் தோல்வியை சந்திக்காத மங்கோலியர் எகிப்து மன்னன் கதஸ் என்பவரிடம் **ஐன்ஜாலூத்தில்** படு தோல்வி அடைந்தார்கள். அது முஸ்லிம் படைகளின் தொடர் வெற்றியை உறுதி செய்தது என்கிறார்கள் வராலாற்று ஆய்வாளர்கள்.*

*மங்கோலியர் தமது இறுதிக்கட்டகங்களில் இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டு தமது மூதாதையர் செய்த தவறுகளுக்கான பரிகாரமாக அம்மார்க்கத்திற்கு பாரிய தொண்டாற்றி மீண்டும் வரலாறு படைத்தார்கள். அதனால் சாபத்திற்குரிய தமது மூதாதையர்களுக்குப் பிறந்தவர்களா? என்று மீண்டும் நினைக்கின்ற அளவு அவர்களின் மனமாற்றம் இருந்ததை மறுக்க முடியாது.*

உயர்ந்து செல்லும் எதுவும் தாழ்வுநிலையே அடைந்தே தீரும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியது போன்றே மங்கோலியரின் நிலையாகிவிட்டது. இது உலக வலாறு நெடுகிலும் காணப்பட்ட வழிமுறையாகும்.

அல்லாஹ்வின் நினைவில் வாழ்ந்து அவனது அருளையும் அன்பையும் பெற்ற மக்களாக இம்மையிலும் மறுமையிலும் அவன் நம்மை ஆக்குவானக எனப்பிரார்த்தனை செய்தவாய்...

**இவண்**

**எம்.ஜே.எம். ரிஸ்வான்**

*உசாத்துணைகள்*

## அரபு மொழியிலான நூல்கள் (من المكتبة الشاملة)


1- ابن كثير الدمشقي : البداية والنهاية – كتاب الكتروني-

2- ابن الأثير: الكامل في التاريخ – كتاب الكتروني-

3- مجموع مؤلفات عقائد الرافضة والرد عليها – كتاب الكتروني-

4- علي محمد الصلابي: موسوعة الحروب الصليبية - المغول" بين الإنتشار والإنكسار – كتاب الكتروني-

5- د/ راغب السرجاني : قصة التتار من البداية إلى عين جالوت

6- صبحي عبد المنعم: الزحف المغولي على العالم الإسلامي

7- مسعود الندوي: تاريخ الدعوة الإسلامية في الهند

8- الجورانه: الهند في ظل السيادة الإسلامية


## அரபு சஞ்சிகைகள்


الجامعة الإسلامية : مجلة البحوث الإسلامية


*தமிழ் நூல்கள்:*


1- முனைவர்: ந.க. மங்கள முருகேசன். முகலாயர் வரலாறு. கி.பி. 1526- 1857


### அரபு இணைய தளங்கள்


2- http://forums.mazika2day.com/t76061.html

3- http://forums.mazika2day.com/t76061.html

4- تيموريون - ويكيبيديا، الموسوعة الحرة http://ar.wikipedia.org/wiki/تيموريون

5- http://www.islamichistory.net/articles/sob1. htm

6- http://www.26sep.net/newsweekarticle.php?lng=arabic&sid=43825

7- http://ar.wikipedia.org/wiki

8- http://www.alhawali.com/index.cfm?method=home.SubContent&contentID=260

9- من موقع : قصة الإسلامالمغول المسلمين / راغب السرجاني: تاريخ

10- http://www.hukam.net/family.php?fam=

11- http://ar.wikipedia.org/wiki/تاريخ سمرقند ويكيبيديا، الموسوعة الحرة

12- http://www.26sep.net/newsweekarticle.php?lng=arabic&sid=43825

13-http://alarabnews.com/alshaab/GIF/28-12-2001/12.HTMالمغولتاريخ
14- موقع ملتقى أهل الحديث
15- http://www.kalemasawaa.com/vb/t3064.html
16- www.aqlamonline.net
17-http://audio.islamweb.net/audio/index.php?page=FullContent&audioid=223317
18-http://blogs.najah.edu/staff/raed-mustafa/article/article-2
19-http://www.26sep.net/newsweekarticle.php?lng=arabic&sid=43825
20-http://ar.wikipedia.org/wiki/